உ

ஸ்ரீ பசவேஸ்வரர் துணை,

சென்னை மாகாண

வீரசைவ, சித்த ஜங்கமர் சங்கம்.

ஸ்தாபிதம் 1-4-45 சென்னை.

முதல் மகாநாடு மலர்.

16-10-45.

சென்னை.

TOTAL PAGES: 44
ACESSNO: 97356
823
N45
97356

உ

ஸ்ரீ பசவேஸ்வரர் துணை.

சென்னை மாகாண

வீரசைவ, சித்த ஜங்கமர் சங்கம்.

ஸ்தாபிதம் 1—4—45 சென்னை.

முதலாவது மகாநாடு.

பார்த்திப ஆண்டு புரட்டாசித் திங்கள் 31-ம் நாள்

16—10—45

சென்னை சந்திரப்ப முதலி தெருவு, ஸ்ரீ அருணாஜல ஈஸ்வரர்

கலியாண மண்டபத்தில்

சேலம். உயர் திருவாளர்

வை. நடேசபண்டாரம் அவர்கள்

தலைமையில் நடைபெற்றது.

சேலம்

திரு-R.A. கமலபதி பண்டாரம் அவர்கள்

சமூகக் கொடியேற்றுவித்தார்

திரு-கலவை. முனுசாமிதேவர் அவர்கள்

மகா நாடு திறந்துவைத்தார்

திரு-தி-தேவராஜுலு தேவர் அவர்கள்

வரவேற்புக் கழகத் தலைவர்

16-10-45.

சென்னை.

பொருளடக்கம்.

பக்கம்.

1 கடவுள் வாழ்த்து — 1

2 கொடியேற்றுவிழா சொற்பொழிவு
சேலம் திரு-R-A-கமலபதி பண்டாரம் அவர்கள் — 2

3 வரவேற்புக் கழகத்தலைவர் அறிக்கை
திரு-தி-தேவராஜுலு தேவர் அவர்கள் — 6

4 மகாநாடு திறப்புவிழா சொற்பொழிவு
கலவை முனுசாமி தேவர் அவர்கள் — 8

5 பிரமுகர்களிடமிருந்து வந்த வாழ்த்து செய்திகள் — 9

6 தலைவருக்கு சங்கத்தாரால் வாசித்தளித்த
அன்பு வரவேற்பு — 12

7 தலைவருக்கு இராசிபுரம் ஜங்கமவாலிபர்
சங்கத்தார் வாசித்தளித்த அன்புவரவேற்பு — 14

8 தலைவர் திரு-வை-நடேச பண்டாரம் அவர்கள்
பிரசங்கம் — 15

9 சங்க ஆரம்ப வரலாறு — 28

10 சங்க விதிகள் (சட்டதிட்டங்கள்) — 29

11 தீர்மானங்கள் — 35

12 சங்கமத்திய நிர்வாகசபை — 35

13 உப சங்கங்கள் — 36

14 நன்கொடை அளித்தவர்கள் ஜாபிதா — 38

15 வரவு செலவு விபரம் — 39

16 நன்றிகூறல் — 40

ஸ்ரீசுப்பிரமணியவிலாசம் பிரஸ், சென்னை T. P. No. 576 காபி 1000.

உ

வாழ்த்து.

சீரார் தெய்வக் கொள்கைகளில் சிந்தைக்குணர்ச்சி மிக்கூட்டும்
ஆராவமுதமென்றேத்தும் அந்தண் பொதுமை அன்பூட்டும்
பேரார் வீரசைவத்தைப் பெரிதும் போற்றல் நம்கடமை
நேராய் வாரீர்! நீணிலத்தில் நிகரில் இதனைப் போற்றுதற்கே. 1

தெய்வக் கூட்டம் சிவக்கூட்டம் சித்தவீர ஜங்கமக் கூட்டம்
உய்வந்தனைக் கொள்உயர் கூட்டம் ஒப்பில் வீரசைவர் உயர்கூட்டம்
கைவந்திடவே கடவுட்சீர் கட்டிக்காக்கும் கவின்கூட்டம்
சைவவீரத் தனிக்கூட்டம் சமயவெற்றிக் கூட்டம்மே. 2

அருளை மறந்தே உலகத்தார் அவமேகாலம் போக்குகின்றார், [கின்றார்
பொருளைப்பொருளாய் மதிப்பிட்டுப் பொய்சேர்நெறியைப் போற்று
தெருளை மறந்தே அறிவிபலைத் தேடி அணுக் குண்டே கண்டார்:
இருளைப் போக்கும் ஒரு தண்டு இனியவீர சைவமிதே. 3

அன்பாம் வீரங்கொண்டவரே அருளாம் வெற்றி கண்டவராம்
அன்பாய் வீர சைவத்தோம் அணிவோம் அதனால் அன்பென்றும்
அன்பால் அணைவீர் அந்நெறியீர்! அதற்கோர்கூட்டம் காண்கின்றோம்
அன்பார்வீர சைவமெனும் அறிவுக்கூட்டம் ஓங்குகவே. 4

வீரசைவர் எல்லோரும் விரைந்து சேர வாருங்கள்!
தீரமுள்ள இனத்தாரே சித்தவீர சங்கமத்தார்
கூறவேண்டா பிறவினத்தார் கூடிநன்மை கொள்வதையோர்
நேரமந்தோ! செல்கிறது நினைந்தே சேர விரைவீரே. 5

எல்லாம் வல்ல எம்பெருமான் எழிலார் நலங்கண் ஈந்தருளி
எல்லாச் சமயங்களிலுமிதுஏற்றமுற்று இலங்கிடவே
நல்லார்நாட்டும் இக்கொள்கை இனிதுவீற்று வெற்றியுடன்
எல்லா மக்கள் தொழும் வீர இசைசேர் சைவ மாகுகவே. 6

வாழி சென்னை மாகாண வீரசைவ சித்தமதே!
வாழி சென்னை மாகாண வீரசைவ சங்கமத்தார்!
வாழி சென்னை மாகாண வீரசைவ மாநாடு
வாழி சென்னை மாகாண வீரசைவ சங்கமிதே! 7

கொடியேற்று விழா சொற்பொழிவு

சேலம் ஜமக்காள வியாபார சங்கத்தலைவர்

திரு. R. A. கமலபதி பண்டாரம் அவர்கள் நிகழ்த்தியது.

தலைவர் அவர்களுக்கும், வீரசைவ சகோதர சகோத்ரிகளுக்கும் என்னுடைய வந்தனம். வீரசைவ சித்த ஜங்கம மாநாட்டில் எனக்குக் கொடியேற்று விழா செய்யும் பாக்கியம் கிடைத்ததற்கு உங்களுக்கும், நம் தலைவர் ஸ்ரீ நடேசய்யா அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மிகப் புனிதமான வீரசைவ மதத்தை உலகில் ஆதிகாலத்தில் ஜகத்குரு பஞ்சாசாரியர் ஸ்தாபித்தனர். இவ்விஷயம் சிவாகமங்களில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது இந்த பூஜ்ய பாதர் பரமேஸ்வரனுடைய கட்டளைப்படி அகில உலகில் சிவபக்தியைப் பரவச்செய்வதற்காக கைலாசத்திலிருந்து திவ்ய கேதாரிகளாய் இந்த மண்ணுலகில் அவதாரம்செய்தனர். அவர்கள் இப்பூமண்டலத்தில் எங்கும் வானில் சஞ்சரித்து பிறநாஸ்திக மதங்களை எல்லாம் கண்டித்து சிவனொருவனே எல்லாம்வல்ல சர்வோத்தமன், அவனைவிடச்சிறந்த பொருள் வேறொன்றில்லை இந்நிலவுலகம் அவனாலேயே படைக்கப்பட்டது. ஒவ்வொருவனும் அப்பரமசிவனின் வழிபாட்டினாலேயே உறுதியாகிய கைவல்ய சுகத்தை அனுபவிக்கவேண்டுமென்று, அனைவரின் இருதய பூமியில் சிவபக்தி என்னும் விதையை நாட்டினர். இந்த மகாத்மாக்களால்தான் பரதகண்டத்தில் சிவபக்தி பரவியது. இதன் முக்கிய காரண புருஷர் பூஜ்ய பாதரேயன்றி வேறொருவருமன்று. இந்த உண்மைகளையே அனேக தரும நூல்கள் பறைசாற்றுகின்றன. பண்டைநாளில் இப்பரதகண்டம் முழுமையும் சிவலிங்கங்களும், சிவாலயங்களும் நிறைந்திருந்தன என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

கல்கத்தாவிலிருந்து வெளிவரும் வங்கவாசி என்னும் செய்தித்தாளின் ஆசிரியர் 1914-ம் ஆண்டின் ஆரம்ப இதழின் தலையங்கத்தில் கூறுவதாவது பண்டை பரதகண்டத்தில் 22 கோடி சைவர்கள் இருந்தனர். இவர்களில் மூன்றுகோடிபேர் வீரசைவராவர். கேரளம் நேபா

ளம், காஷ்மீரும், உஜ்ஜைனி ஆகிய நாடுகளின் அரசர்கள் லிங்கதாரணம் செய்துகொண்டனர். மக்கள் இந்த லிங்கதாரணத்தை எக்காலத்தில் விட்டனரோ! அறியோம். காஷ்மீரமானது சிவபக்திக்குத் தாயகமானது. மற்றும் ஆப்ரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா ஆகிய கண்டங்களிலும் கூட பண்டைக்காலத்தில் சைவமதம் பரவியிருந்தது என்பதை காசிநகரில்வசிக்கும் மீ. பாபு பேசுசிங் என்னும் க்ஷத்திரிய சிவபக்த அறிஞர், பிரான்சுநாட்டின் அரசர் லூயி என்பவர் ஆகிய இவர்கள் எழுதிய நூல் ஆதாரங்களைக்கொண்டு இன்னின்ன இடங்களில் சிவாலயங்கள் உள்ளன என்பதை அறிய முடிகிறது. முஸ்லீம்களின் புண்ணிய க்ஷேத்திரமான மெக்காவில் மெக்கேஸ்வரம் என்ற லிங்கமும், துருக்கி ஸ்தானத்திலுள்ள பாபிலோனில் உள்ள லிங்கமும், ஹெட்ரா போலீஸ் என்னும் நகரில் 300 கை உயரமுள்ள சிவலிங்கமும், தென் அமெரிக்கா பிரேஜில் என்னும் நாட்டில் பழமையான பல சிவலிங்கங்களும் விநாயக மூர்த்திகளும் உள்ளன. கிரீஸில் காரிந்த நகரில் பார்வதி தேவியின் ஆலயங்களும் உள்ளன. இன்னும் ஸ்காட்லாந்தில் கிளாஸ்கோ நகரிலும், யகூதிதேசத்திலும், அபரிஸ்தானிலும், சித்ரால், காபூல், பலக் பூகார் முதலான இடங்களிலும் ஆங்காங்குள்ள மக்கள் அங்குள்ள லிங்கங்களையும், தேவதைகளையும் பூஜித்து வருகின்றனர்.

இவ்வெல்லா விஷயங்களையும் ஆராயுமிடத்து முற்காலத்தில் நிலவுலகெங்கும் சைவமதம் நிறைந்திருந்த தென்பது விளங்குகின்றது. இப்படிப் பரவியதன் காரணம் சாக்ஷாத் பகவத்ரூபிகளான ஸ்ரீ ஜகத்குரு பஞ்சாசாரியர்களின் பிரபாவமே. ஆதலினால்தான் சுப்ரபோத பார்வதிக்குப் பரமேஸ்வரன் 'ஏ! பார்வதி! ஸ்ரீமத் பஞ்சாசார்யர் நம்முடைய உலகமுதற்கொண்டு பதினான்கு உலகங்களுக்கும் ஜகத்குருக்களாக இருக்கின்றனர் என்று உபதேசித்துள்ளார். இந்த ஆசாரியரே விஷ்ணு, பிரம்மாதிதேவர்களுக்கும் லிங்காதாரணம், பஞ்சாக்ஷரம் முதலிய மந்திரோபதேசம் செய்திருக்கிறார் என்பதை பாசுபத தந்திரம் முதலிய நூல்கள் மிக்க வன்மையாகச் சொல்லுகின்றன. ஆனபடியால்தான் பஞ்சாசார்யர்களுடைய காலம் வேதகாலத்திற்கு முற்பட்டது என்று அநேக சாஸ்திரங்கள் கோஷிக்கின்றன. இன்று உதாரணமாக பரதகண்டத்தில் மிக்க பிரசித்திபெற்ற பண்டரிபுரத்திலுள்ள விடோபா என்னும் விஷ்ணுமூர்த்தியின் சிரசிலும் பார்ஸி சோலாப்பூர் பட்டணத்திலுள்ள பகவந்தன் என்னும் விஷ்ணுமூர்த்தியின் சிரசிலும், பஸ்

லாரிஜில்லா நரசிம்மமூர்த்தியின் கையிலும் லிங்கதாரணம் உள்ளதை இன்றும் காணலாம். மற்றும் உலகில் தம்முடைய தபப் பிரபாவத்தினுலும், மகிமா பிரபாலத்தினுலும், ஞானப்பிரபாவத்தினுலும், வைராக்கியப்ரபாவத்தினுலும் பெரும் புகழ்கொண்டு இன்றளவும் விளங்கும் அகஸ்தியர், கௌதமர், தூர்வாசர், ததீசி, சானந்தர், காசிபர், வியாசர், உபமன்யு முதலான எண்ணற்ற முனிவர்கள் லிங்காதாரணம் செய்யப்பெற்று பஞ்சாசாரியரால் ஞானத்தை விவரம் பாசுபததந்திரம், ஸ்ரீ சைலகாண்டம், காசிகாண்டம், முதலான நூல்களில் விவரமாகக் கூறப்பட்டுள்ளது. இப்பூஜ்யபாதர்கள், மற்ற சமய ஆசாரியர்களைப் போன்று, தந்தை, தாய்கற்பத்தினின்று ஜனித்தவரன்று எவ்வாறெனில்:

ஸ்ரீ ஜகத்குரு ரேணுகர் கொல்லிபாக்கி சோமேஸ்வர லிங்கத்திலும்,
ஸ்ரீ ஜகத்குரு தாருகர் வடவிருக்ஷம் சித்தேஸ்வர லிங்கத்திலும்
ஸ்ரீ ஜகத்குரு ஏகோராமராத்திரியர் ராம க்ஷேத்திரம் கேதாரம்
ராமநாத லிங்கத்திலும்,
ஸ்ரீ ஜகத்குரு பண்டிதாராத்திரியர் ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுன
லிங்கத்திலும்
ஸ்ரீ ஜகத்குரு விஸ்வாராத்திரியர் காசிவிஸ்வநாத லிங்கத்திலும்
அவதாரம் செய்தனர்.

பிறகு மகிமை பலத்தினுல் வீரசைவ மதத்தை நிலைநாட்டி, தம்மால் நிறுவப்பட்ட வீரசைவ மதத்தை பாதுகாத்தல் நிமித்தம் ஐந்து, தர்ம பீடங்களை ஸ்தாபித்தனர். இவற்றுள் மைசூர் தேசத்தில் கடூர் ஜில்லாவில் பாளே உறன்னூர் என்னுமிடத்திலேயும், பல்லாரி ஜில்லாவில் உஜ்ஜயினியிலும், கடவால ஜில்லாவில இமவத் கேதாரத்திலும், கர்நூல் ஜில்லாவில் ஸ்ரீசைலம் என்னுமிடத்திலும், காசி க்ஷேத்திரத்திலும் ஐந்து பீடங்களுள்ளன. பண்டைக்காலத்தில் பரத கண்டம் முழுமையும் வீரசைவர்கள் நிறைந்திருந்ததினுல் அதன் பாதுகாப்பிற்காக முக்கிய இடங்களில் தமது பீடங்களை நிறுவினர். இன்றைக்குச் சுமார் 5000 வருடங்களுக்கு முன் ஜனமேஜய மகாராஜன் ஸ்ரீ ஜகத்குரு இமவத்கேதார சிம்மாசனுதிபதிகளாகிய ஆனந்த லிங்க ஜங்கமரென்னும் மகாசுவாமிகளுக்கு ஒரு பெரிய சாசனத்தை எழுதிக் கொடுத்துள்ளார். அது யுதிஷ்டிர ஜகம் 9-வது பிலவங்க வருஷம் மார்கழிமாதம் அமாவாசைத் திங்கட்கிழமையன்று ஸ்ரீ கேதாரநாதர் பூசைக்காகவும், தம்முடைய மாதா, பிதாக்களின் பிராப்திக்காகவும், சந்திர சூரியர் சாக்ஷியாகக் கொடுக்கப்பட்ட இச்சாசனத்தை அபகரிக்

கின்றவர் எவராயினும் 60-ஆயிரம் ஆண்டுகளுக்கு கிருமிகளாகப் பிறக்கக்கடவர் என்று எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அரசனால் ஒரு ஆயிரம் கிராமங்கள் மான்யமாக விடப்பட்டிருந்தன. இவற்றில் 140-கிராமங்களைப் பீடத்திற்கு விட்டு மீதிகிராமங்களை பிரிட்டிஷ் கவர்ண்மெண்டார் சுவாதீனப்படுத்திக்கொண்டார்கள். காசி பீடத்திற்கும் அநேக சாசனங்கள் உண்டு. அவைகளில் ஜயானந்ததேவன் என்ற அரசன் சில ஜமீன்களைக் கொடுத்துள்ளார். அந்த இடமே இன்று காசியில் ஜங்கபுரம் என்னும் பெயரால் வழங்கி வருகிறது. காசியிலுள்ள ஜங்கமவாடி என்னும் மடத்தை ஔரங்கசீப் பிடிக்க முயன்றும் பஞ்சாசார்யர்களுடைய பிரபாவத்தினால் சரணாகதியடைந்து பீடத்திற்கு அநேக சாசனங்கள் அளித்திருப்பதை இன்றும் காணலாம்.

இப்படி மகா சிரேஷ்டமானதும், மகா புனிதமானதுமான வீரசைவ மதமானது பிரசமய அரசர்களின் கொடுமையினால் க்ஷீணதசையடைந்தும் நெருப்பிலிட்ட செம்பொன்னைப்போன்று ஒளிமங்காது இருந்து உலகமுள்ளளவும் எல்லா மக்களும் மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடைதற்பொருட்டு சாக்ஷாத் நந்தீஸ்வரனே பஸவேஸ்வரனென்னும் நாமத்தோடு இப்பூவுலகின்கண்ணே பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னே அவதரித்தார். இவர் கல்யாணபுரியில் சமணமத அரசனை பிஜ்ஜளனிடத்தில் அமைச்சுத்தொழில் புரிந்து வந்தார். பசவர் ஜங்கம பக்தியில் சிறந்து விளங்கினார். பாமர மக்களையும் ஞானிகளாக்கினார். கொலை, வேள்வி முதலிய தீய ஒழுக்கங்களைத் தடுத்தார். மக்களுக்கு உயர்வு தவத்தால் உண்டன்றி பிறப்பால் இல்லை என்பதனை சொல்லிலும், செயலிலும் காட்டி, ஜாதி உயர்வு தாழ்வுகளைக்களைந்து செம்மைப்படுத்தினார். சிவலிங்கம் தரித்த எக்குலத்தவரையும் தான்தொழும் சிவமாகவே கருதி வழிபட்டார். ஏழைகளின் பங்கில் நின்று அவர்களை உய்யச்செய்தார். கடவுளை வழிபடுதற்கும், சமயத்தொண்டு ஆற்றுவதற்கும், கல்வி, கேள்வி முதலியன பயில்வதற்கும் பெண்களுக்கு உரிமைதந்தார். சிவாகமங்களை உலகுக்குத்தந்தார், சிவகணத் தலைவராகிய அந்நந்தீஸ்வரனையே பரமேஸ்வரன் கொடியாகக்கொண்டார். ஸ்ரீநந்தீஸ்வரன் அவதாரியும், நந்திஸனின் பரியாய பெயர்பூண்டு இடுக்கண்களைந்த பரமேஸ்வரரைக் குறிக்கிறது. ஆதலின் இக்கொடி பசவக்கொடி எனப் பெயர் பெற்றது.

இக்கொடியின் குறிக்கோளாவன:

கடவுளை இஷ்ட ப்ராண பாவனைகளினால் வழிபடுதல் வேண்டு மென்றும், குரு, லிங்கம், ஜங்கமம், இம்மூன்றும் கடவுள் வடிவமென் றும், ஒவ்வொரு உயிரும் கடவுளின் கோவில் என்றும் எல்லா உயிரி னிடத்தும் அன்புகொண்டு ஒழுகுதலே சிறந்த அறமென்றும் இது குறிக்கிறது இவ்வுயர்ந்த லக்ஷியங்களைக்கொண்ட கொடிக்கு நாம் என்றும் வணக்கம் செய்தல் இயல்பே. ஆதலின் இப்பெரும் குறிக் கோளாகிய இக்கொடியை வணங்கி உயர்த்துகிறேன்.

எப்படி பெண்களுக்கு மாங்கல்யம் பிரதானமோ அப்படி சமயக் கொடியும் தேசக்கொடியும் மக்களுக்கு ப்ரதானமாகும். ஒருவனுக்குக் குடும்பப்பற்று அதிகரித்தால்தான் மதப்பற்று உண்டாகும். மதப்பற்று உண்டானால் தான் தேசப்பற்று உண்டாகும். இப்படி நோக்குமிடத்து நம் சமூக மக்கள், கல்வி, வியாபாரம், தொழில், தேசத்தொண்டு முத லான காரியங்களில் பெரும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்று உங்கள் எல்லோரையும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். சுதந்தர உலகமும், அறிவு உலகமும் எதிர்நோக்கி உங்களை அழைக் கும்பொழுது நீங்கள் பின்னணியில் நிற்காமல் முற்போக்கில் செல்ல வேணுமாய்க் கேட்டுக்கொண்டு, இதுகாறும் பேசுவதற்கும் வசதி கொடுத்த உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த வந்தனத்தைத் தெரி வித்துக்கொள்ளுகிறேன். சுதந்திரம் கோருகிறது காங்கிரஸ் மகா சபை ஒன்றுதான். அதில் நீங்கள் எல்லோரும் அங்கத்தினர்களாகச் சேர வேண்டுமென்றும் நம்குல வீரசைவமக்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்

வீரசைவம் ஓங்குக.

வரவேற்புக் கழகத் தலைவர் அறிக்கை.

பெரியோர்களே!

நாம் அனைவரும் இன்று ஒன்று கூடியிருப்பது ஒரு பெரும்பாக் கியம். நம் சமூக விஷயங்களைப்பற்றி யோசித்து முன்னுக்கு வரவேண் டிய வழிகளைத் தேடவே நாம் இங்குக் கூடி யிருக்கிறோம்.

பூர்வகாலந்தொட்டே நம் மதத்தினர் போற்றப்பட்டு அந்தணர். அரசியல் துறைகளிலும், வைத்திய முறைகளிலும் கல்வி கேள்விகளி லும் சிறந்து ஆசாரியர்களாகவும் விளங்கினர்கள்.

அரசியல் துறைகளில் சிலர் மந்திரிகளாக இருந்து அச்சமஸ்தா னங்களை விங்காயத்து சமஸ்தானங்களாகத்திருத்தி வீரசைவ மதத்தை யும் பரவச்செய்துள்ளனர். பலர் மணி, மந்திரம், ஔஷதம் முதலிய வைகளால் நோய், நொடி, பேய், பில்லி, சூனியம் முதலியவற்றை அகற்றிவந்தார்கள். அதுகாரணம் பற்றியே நம்மவர்க்கு 'சித்தர்' என் னும் பெயர் வழங்குவதாயிற்று.

ஜங்கமர் என்றால் தன்னலமற்ற தியாகிகள் என்பது பொருள். அதற்கிணங்க பரோபகாரத் தொழிலாகிய ஆசிரியர் தொழிலை மேற் கொண்டனர். அவர்கள் தம் வாழ்நாட்களை பிறருக்கு இலக்கணம், இலக்கியம் முதலியவற்றைப் போதிப்பதிலேயே கழித்து வந்தார்கள்.

சிலர் நாட்டாண்மைக்காரராகவும், பெருதனக்காரராகவும் இருந்து வந்தனர். சிலர் தம் கல்வி கேள்வி வன்மையால் நவாப்புகளிடம் மான் யங்களும், இனும் கிராமங்களும் பெற்றார்கள்.

இவ்வாறு சிறப்புற்றோங்கிய நம் மதத்தினர்க்கும் வீரசைவத்தை அடிப்படையாகக்கொண்ட ஐந்து மடங்களும், மடாதிபதிகளுமே ஆசாரியர்களாவார்கள். ஆனால் தற்காலத்தில் நம்மில் பலர் வீரசைவத் தின் கோட்பாடுகளை அறவேமறந்து தான் தோன்றித்தம்பிரான்களாய்த் திரிகிறார்கள். தீப்பழக்கங்களை மேற்கொண்டு அனாசீரமடைந்து வரு கிறார்கள். இதற்குக்காரணம் போதிய அறிவின்மையும், அவர்களை நடத்திச்செல்வோர் இல்லாமையுமேயாகும். அறிவை நல்லவழியில் வளர்ப்பது கல்வி. கல்வியில்லா ஒருவனை தீய பழக்கங்கள் அடிமை யாக்கிவிடுகின்றன. கல்விக்குச் சாதகமாக இருப்பவை நூல்கள். நூல் கள் பல வகைப்படும். அவை அறநூல், நீதிநூல், சமயநூல், அறிவி யல் நூல் முதலியன. தெய்வப்புலவர் திருவள்ளுவர் இயற்றிய திருக் குறள் அறநூலாகும், இராமாயணம், மகாபாரதம் முதலியன நீதிநூல் களாகும். தேவாரம், திருவாசகம் முதலியன சமயநூல்களாகும். இவை நம் அறிவைப்பெருக்கி நம் மனதைப் பண்படுத்துவன. நம் சமுதாய கோட்பாடுகளினின்றும் வழுவாமல் நம்மைக் காப்பாற்ற வல்லவை முற்காலத்தில் மடாதிபதிகள், பெருதனக்காரர்கள், நாட்டாண்மைக் காரர்கள் இவர்களே சமூகக் கட்டுப்பாடுகளையும், வீரசைவ தர்மங்களை யும் செவ்வனே நடத்திவர காரணகர்த்தராக இருந்தனர். இவர்கள் தற் போது ஊக்கங்குன்றியிருக்கின்றனர். ஆகையால் நாம் சங்கங்கள்நிறுவி அவைகளின் வாயிலாக சமூகம் முன்னேற்றமடைய முயற்சி செய்ய வேண்டும் இதற்குக் கட்டுப்பாடு மிக அவசியம்!

ஆகையால் பெரியோர்களே! நாம் அனைவரும் சங்க சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு, சங்க நோக்கங்களை நிறைவேற்ற மேன்மேலும் உழைக்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரியவேண்டுமென வேண்டுகின்றேன்.

தி. தேவராஜுலு தேவர்.
16-10-45

வரவேற்புக் கழகத்தலைவர்.

மகாநாடு திறப்பாளர்

திரு. கலவை முனுசாமிதேவர்

அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு.

சகோதர, சகோதரிகளே!

இந்த மகாநாட்டுத் திறப்பு விழாவுக்கு நியமிக்கப்பட்ட நமது நண்பர் ஸ்ரீமான் R. A. வையாபுரி அவர்கள் சில எதிர்ப்பாராத காரணங்களால் வரமுடியாமற்போனதினால் அவருக்குப்பதிலாக நீங்கள் என்னை நியமித்ததால் நான் செய்தபாக்கியம் என்றும், இத்தகைய சமயம் வாய்ப்பது அரிது என்றும் எனது மனமார்ந்த வந்தனத்துடன் திறப்பு விழா செய்கிறேன். நாம் கூடிய கூட்டத்தின் கருத்து எல்லோருக்கும் தெரிந்ததே. என்றாலும் என்னை நியமித்ததால் என் விண்ணப்பத்தை உங்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

தற்காலத்தில் நம் தேசத்தில் நடக்கும் முன்னேற்ற மாறுதலில் எல்லா ஜாதியாரும் முன்னேறும்போது நம் ஜாதியார் மாத்திரம் பிற்போக்கில் முன்னேறுகிறார்கள். இதற்குக் காரணம் குறுகிய ஜனத்தொகை, ஒருவருக்கொருவர் அடிக்கடி சந்திக்க சந்தர்ப்பம் இல்லாதபடி ஊருக்கொருகுடியாயிருத்தல், வறுமை, ஒற்றுமையில்லாமை, பொறாமைப்படுதல், யார் எப்படிப்போனால் என்ன, நம் காரியம் மாத்திரம் சரிவர நடந்தால்போதும் என்னும் சுயநலம், இவைகளை ஒழித்தால்தான் நாம் முன்னேற்றமடையலாம். க்ஷேமப்படலாம். மனிதனாகப்பிறந்த நாம் எல்லோரும் கடவுளுடைய பிள்ளைகள். நாம் எல்லோரும் ஒரு குடியிற்பிறந்த உறவினா என்று நினைத்து பேதக புத்தியை நீக்கி நம் ஜாதி முன்னேற்றத்திற்காக ஒவ்வொரு நண்பரும், சிறியவர் முதல் பெரியவர் வரையில், ஆண் பெண் அடங்கலும், நன்றுழைப்பீரென்று என்னுடைய தாழ்மையான வந்தனத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

K. முனுசாமி தேவர்.
16-10-45

பிரமுகர்களிடமிருந்து வந்த வாழ்த்துக் கடிதங்கள்.

நமஸ்காரம் 11—10—45.

16-10-45-ல் நான் சென்னையில் இருக்க இயலாது. ஆகையால் தங்களுடைய மகாநாட்டில் நான் இருந்து மகிழ்ச்சியடைய இடமில்லை. என் நண்பர் நடேசபண்டாரம் அவர்கள் தலைமையில் மகாநாடு நன்கு நடைபெறும் என்பதில் சந்தேகமில்லை.

இப்படிக்கு.

Dr. சி. ராஜகோபாலாச்சாரி.

மாஜி பிரதம மந்திரி.

மகாநாட்டிற்கு வர முடியாமைக்கு மன்னிக்க வேண்டுகிறேன் மகாநாடு வெற்றிகரமாக நடக்கவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

M. C. மல்லப்பா

நெ 216 எட்டய்யபுரம். 13—10—45

தங்கள் அழைப்பிற்கு மிக நன்றி செலுத்துகிறேன் தமிழ் நாட்டில் சிர்த்திபெற்றவரும், நம் குலத்திலகருமான ஸ்ரீ வை. நடேசபண்டாரம் அவர்கள் தலைமையில் நம் சமூகம் எல்லாவகையிலும் முன்னேற்ற மடையும். தற்சமயம் மகாநாட்டிற்கு வரக்கூடாமைக்காக மன்னிக்கவும்.

K. ஆறுமுக பண்டாரம்

ரத்ன விலாசம்,
சேலம் 6-10-45

ராவ்பகதூர் S. P. ராஜமாணிக்கம்.

அன்புள்ள வீரபத்திரன் அவர்களுக்கு,

தங்கள் 4-10-45 தேதிய அழைப்பிற்காக வந்தனம். நான் ஆறு மாத காலமாக படுக்கையில் இருக்கிறேன். மகாநாட்டிற்கு வரக்கூடாமைக்கு மன்னிக்கவும். மகாநாடு வெற்றியோடு முடியவேண்டுமென்று வேண்டுகிறேன்.

S. P. ராஜமாணிக்கம்

குமாரி, தேனும்பேட்டை, 15—10—45

அன்பார்ந்த நண்பர் அவர்களுக்கு,

தங்கள் சமூகத்தின் முதலாவது மகாநாடு தங்கள் தலைமையில் நடைபெறுவது எனக்கு மகிழ்ச்சியையளிக்கிறது. என் உடல் அசௌக்கியத்தால் மகாநாட்டிற்கு வர முடியவில்லை. மகாநாடு வெற்றிகரமாக நடைபெறவேண்டும். தங்கள் சமூகத்தின் எதிர்காலம் பயனுடையதாக இருக்க நான் பிரார்த்திக்கிறேன்.

ராவ்பகதூர் S. K. எக்ஞநாராயண அய்யர், M. A.

மைசூர் சமஸ்தான வீரசைவ சங்கம்.

அன்புள்ள ஐயா, பெங்களூர், 6—10—4 .

தங்கள் அழைப்பிற்கு மிகவும் வந்தனம் சனம் நடேசையா அவர்களும் தங்கள் மகாநாட்டைப்பற்றி எனக்கு எழுதியிருந்தார்கள். தங்கள் சமூகத்தின்நோக்கம் மெச்சத்தக்கது. நீண்ட நாட்களாக எதிர்பார்த்தது அரிய முயற்சியின்பேரில் சீக்கிரத்தில் அந்நோக்கம் நிறைவேறவேண்டும்.

பொதுவாக லிங்கதாரிகள் பல துறைகளிலும் பின்னணியில் இருக்கிறார்கள் என்று சொல்வதில் தவறில்லை. வீர சைவத்தின் கோட்பாடுகளைப் பரப்புவதில் அதிக கவனம் செலுத்தவேண்டும். நம் சமூகத்தின் கோட்பாடுகளுக்கு மாறுபாடுள்ள கோட்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் பின்பற்றுவதில் பயனில்லை. லிங்கதாரணம் செய்து கொள்ளல், தினசரி இருமுறையாவது கடவுளை வழிபடுதல், உயிர்க்கொலை செய்யாதிருத்தல் மது அருந்துதலை அடியோடு ஒழித்தல் முதலிய தீர்மானங்களைக்கொண்டுவந்து அவைகளுக்குக் கட்டுப்படாதவர்களை குடும்பங்களிலிருந்து பகிஷ்கரிக்கவேண்டும். இல்லையானால் சங்கங்களாலும், மகாநாடுகளாலும் பயன் என்ன? 16-10-45-ல் மகாநாட்டிற்கு வரக்கூடாமைக்கு வருந்துகிறேன். மற்றொருசமயம் வாய்க்கும்போது தங்களுடன் இருக்க விரும்புகிறேன். ஏனெனில் இயன்ற உதவியைத் தங்கள் சமூகத்திற்குச் செய்ய எப்பொழுதும் சித்தமாக இருக்கிறேன். தங்கள் அபிவிருத்தியைப்பற்றி எனக்கு அடிக்கடி அறிவிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மகாநாடு வெற்றிகரமாக முடிந்தேறவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

G. C. வீரப்பா, B A LLB

டாக்டர். T. S. சித்தப்பா L. M. & S.

மைசூர், 8—10—45.

வீரசைவ ஜங்கமர் சங்கம் ஒன்று சென்னையில் நிறுவியதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

வை. நடேசையா அவர்கள் வீரசைவ சமூதாயத்தின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபடுகிறவர்கள் அவர்கள் தலைமையில் தங்கள் சமூகம் வெற்றிபெறும்.

தசராவை முன்னிட்டு நடைபெறும் மைசூர் மகாராஜா தர்ப்பாரில் நான் இருக்கவவண்டுமாகையால் தங்கள் மகாநாட்டிற்கு வரமுடியாது. மன்னிக்கவும்.

கிறீஸ்மசின்போது நான் சென்னைக்கு வர நேரிடும். அதுசமயம் தங்கள் சங்கத்திற்கு விஜயம் செய்கிறேன்.

T. S. சித்தப்பா

S. ராமலிங்கம் B. A.

சிட்டம்பட்டி, மதுரை 10—10—45

சேலம் வீரசைவ வாலிபர் சங்க செயலாளர்கள் சார்பாக தங்கள் சங்கத்தைப் பாராட்டுகிறேன். ஆண்டவன் அதற்கு எல்லாவித நன்மைகளையும் கொடுக்கவேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

தங்கள் தலைவருக்கு எங்கள் அன்பும் நன்மதிப்பும் உரியது.

S. ராமலிங்கம்

R. A. வையாபுரி B. A.

அன்புள்ள ஐயா! திருச்சினப்பள்ளி, 8—10—45,

தங்கள் மகாநாட்டைப்பற்றி வை. நடேசையா அவர்களும் எழுதியிருந்தார்கள். உத்தியோக முறையில் நான் பிரயாணத்தில் இருக்க நேரிடுமாகையால், தங்கள் மகாநாட்டுத்திறப்பு விழாவை நிகழ்த்தி வைக்கமுடியாது என்று வருந்துகிறேன். மன்னிக்கவும். ஸ்ரீ வை. நடேசையா அவர்களுக்கும் இதைப்பற்றி எழுதுகிறேன், எல்லாம்வல்ல இறைவன் மகாநாட்டைப் பூரண வெற்றிக்குக்கொண்டுவர அருள் புரிவானாக,

R. A. வையாபுரி

அர்த்தனூர் B. E.

சிட்டம்பட்டி, 10-10-45

P. W. D. சூப்பர் வைசர்

தங்கள் அன்பு வரவேற்பு எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. மகா நாட்டிற்குவந்து என் பங்கு தொண்டாற்ற விரும்புகிறேன் ஆனால் இப்போதுள்ள காலநிலையில் (மழைகாலம்) நான்வரக்கூடவில்லை. என்றாலும் என் முழுமனமும் அன்று அங்கிருக்கும். சங்கத்திற்கு வெற்றியும், முற்போக்கும் அளிக்கவேண்டுமென கடவுளைப் பிரார்த்திக்கிறேன். தலைவருக்கும் மற்றவர்களுக்கும் என் அன்பு உரியது.

அர்த்தனூர்.

16—10—45 அன்று சென்னையில் நடந்த சென்னை மாகாண வீரசைவ சித்த ஜங்கமர் மகாநாட்டுத் தலைவர் வீரசைவர்

வை. நடேசைய அவர்களுக்கு

ஷை சங்கத்தார் வாசித்தளித்த

அன்பு வரவேற்பு.

உயர்குலத்துதித்தோய்' சமயங்களில் சீறிதாகிய சைவசமயத்தின் களையாம் வீரசைவத்துதித்த வீரரே! வீரசைவத்திற்கு ஆக்கம் தேடவே நீர் உதித்தீர்போலும், தாங்கள் ஆங்காங்கு நிகழ்த்தியுள்ள வீரசைவ சொற்பொழிவுகளையும், ஆற்றிய பணிகளையும் நோக்கின் நன்கு விளங்கும், தங்கள் வீரசைவத்தொண்டு மென்மேலும் பெருக இறைவன் அருள் புரிவானாக.

நற்குடி மகனே! சீலமுள்ள தந்தையார் வைத்தியலிங்கத்திற்கும் தாயார் தயிலம்மைக்கும் ஒப்பற்ற புதல்வரே! நம்மைப் புதல்வராய் பெறுதற்கு அவர்கள் என்ன தவம் செய்தனரோ, தங்களுடைய தாய் தந்தையர் தக்கவர்கள் என்பதை தங்களைக்கொண்டு அறியவல்லோம்,

வீரசைவ சமய குறவரே! தங்களை ஒரு சமயகுறவர் எனத்தகும். தாங்கள் எழுதியுள்ள பசவேஸ்வரர் திருச்சரியும், அவருடைய அருண்மொழிகளும், தாங்கள் ஆங்காங்கு நிகழ்த்தியுள்ள வீரசைவ சொற்பொழிவுகளும் அவற்றைப்படிக்கும் ஒவ்வொருவரையும் வீரசைவத்திற்கே அழைத்துச் செல்கின்றன.

நாமகிரிப்பேட்டை வீரபத்திரர் மடத்திருப்பணித் தலைவ ! இது ஒன்றே தாங்கள் ஆண்டவன் திருப்பணியில் எவ்வளவு ஈடுபட்டிருக்கின்றீரென்பதைத் தெரிவிக்கின்றது. எங்களையும் அவன் திருப்பணியில் ஈடுபட ஊக்குகின்றது.

தென் இந்திய வீரசைவ ஜங்கமர் சங்கச் செயலாளரே! தாங்கள் இச்சங்கத்தின் செயலாளராய் இருக்கும் அனுபவத்தினாலன்றோ எங்களையும் இச்சங்கத்தில் ஊக்குவழிகாட்டிச் செல்கின்றீர்! தங்களுடைய சேவையை நாங்கள் எப்படி மறக்கமுடியும். இச்சங்கத்திற்குத் தங்கள் உதவி என்றென்றும் இருப்பதாக.

மருத்துவ விடுதியில் வசதியளித்த நன்கொடையாளரே ! நீர் நும் மகள் ஞாபகார்த்தமாக சேலம்ஜில்லா ஆஸ்பத்திரியில் பிரசவ விடுதிக்கு நன்கொடையளித்துப் பல ஏழைக் குடும்பங்களைக் காப்பாற்றிவரும் கருணை வள்ளல்! உம் ஈகைக்குணம் மென்மேலும் சிறப்பாகுக.

சமரசநெறியாள! சமரச மார்க்கமே சன்மார்க்கம் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்ட தாங்களே ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்றீர். சேலம் கீதா சங்கத்திற்குச் செயலாளராய் இருப்பதே இதற்குப் போதிய சான்றாகும், தங்கள் சமரசமார்க்கம் உலகமெங்கும் பெருகுக.

வியாபார சங்கத்தலைவ! மாணிக்கவாசகர், பசவேஸர் முதலியவர்கள் சமய குறவராக மாத்திர மல்லாமல் அரசாங்க நிர்வாகத்திலும் முதன்மை பெற்றிருந்தார்கள். தாங்கள் வாணிப நிர்வாகத்திற்குத் தலைமை தாங்கி நிற்கின்றீர்கள். என்னே தங்களது ஆற்றல் !

சென்னை வீரசைவ சித்த ஜங்கம சங்க மகாநாட்டுத் தலைவ! இம்மாநாட்டிற்குத் தாங்கள் தலைமை வகிக்க நேர்ந்தது நாங்கள் பெற்றபேறே. நல்லாரைக் காண்பதுப், அவர் சொற் கேட்பதும், அவரோடு இணங்கியிருப்பதும் நன்று அல்லவா. தாங்கள் இச்சங்கத்திற்கு ஆசிகூறி இதைப் பல பல வகைகளிலும் முன்னேற்ற வேண்டுகின்றோம். தங்கள் தேசத்தொண்டும், சமூகத்தொண்டும் மேன்மேலும் பெருக தங்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் எல்லா நலன்களும் இனிது நல்கவும் நீண்ட ஆயுளையும் நோயற்ற வாழ்க்கையையும், அறிவும் ஆற்றலும் கொடுக்கவும் வேண்டுகின்றனம்.

இப்படிக்கு,

வீர சைவசித்த ஜங்கமர்

16—10—45-ல்

சென்னை மாகாண வீரசைவ சித்த ஜங்கமர்கள் முதலாவது

மகாநாட்டில் தலைமை தாங்கிய சேலம் வர்த்தக சங்கத்தலைவர்

உயர் திருவாளர் வை-நடேசபண்டாரம்

அவர்களுக்கு இராசிபுரம் வீர சைவ ஜங்கம வாலிபர் சங்கத்தார்

அன்புடன் வாசித்தளித்த வரவேற்பு

வெண்பா.

சீராரும் சைவம் சிறக்குமுயர் சேலமெனும்
பேராரும் மாநகரில் பெட்புடன் வாழ்—நேராரும்
நல்லறத்தை நாடும் நடேச பண்டாரமென்றே
நல்லவர்கள் சாற்றிடு வோய் நன்கு.

சென்னை மாகாணத் திருவீர சைவசித்த
நன்னலஞ்சேர் ஜங்கமர் மா நாட்டார்கள்—பன்னலத்தைத்
தாமடைய மாதலைமை தாங்கிடவே நீவருக!
நேமமுறும் செம்மனத்தோய்! நேர்.

அன்பும் அறிவும் அடக்கமும் தூயமனத்
தென்பும் நிறைந்தத் திருவுடையோய்—இன்னே
வருக! நலமே வளர் நம் சமூகம்
பெருகுமதி சொல்வோய் பெரிது.

வாழ்க நீ மக்கள் வளமார் மனைசுற்றம்
வாழ்க சமூகம் வறுமையின்றி—வாழ்க
புகழும் புவியிற் பொதுநலத் தொண்டு
திகழும் படிச்செய்வீர் தேர்ந்து.

இங்ஙனம்,

இராசிபுரம்
16-10-45.

இராசீபுரம் வீரசைவ ஜங்கம வாலிபர்
சங்கத்தார்.

சென்னை மாகாண வீரசைவ சித்த ஜங்கமர் முதல் மகாநாட்டில் தலைமை வகித்த சேலம்

ஸ்ரீ வை-நடேசபண்டாரம் அவர்கள் தலைமை பிரசங்கம்

16—10—4;.

ஜங்கம சகோதரர்களே, சகோதரிகளே, பெரியோர்களே!

சென்னை மாகாண வீரசைவ சித்த ஜங்கமர்களின் முதல் மகாநாட்டில் அக்கிராசனம் வகிக்கும் இப்பெரும் பாக்கியத்தைக்கொடுத்து அடியேனைக் கௌரவப்படுத்தியதற்காக உங்களுக்கு என் பணிவான நமஸ்காரங்களை சமர்ப்பிக்கின்றேன். பொருப்புவாய்ந்த இப்பதவிக்கு கல்வி, மதபக்தி, உலகஞானம் அதிகமாய்டபெற்றிருக்கும் நம் குலப பெரியோர்கள் பலர் அருகதையுள்ளவர்களாயிருக்க, உங்களில் ஒருவனாக இருந்து தொண்டாற்றிக்கொண்டிருந்த தொண்டனை இதில ஈடுபடுத்திவிட்டீர்கள். இவ் உயர்ந்த பதவியிலிருந்து உங்களுக்குப் பல விஷயங்களை எடுத்துக்கூறுவேன் என்று நீங்கள் எதிர்ப்பார்த்திருந்தால் அதில்வரும் ஏமாற்றம் கொடுக்கக்கூடியவனாயிருப்பேன். அன்பு மிகுதியால் தகுதியையும் புறக்கணித்து, நீங்கள் இட்ட இக்கட்டளையை உத்தரவுக்குக் கீழ்ப்படிதலே தொண்டன் முதற்கடமை என இப்பதவியை ஏற்க நான் துணிந்தேன், தங்களுடைய கட்டளையை சிரமேற்கொண்ட நான் இப்பதவியிலிருந்து நிறைவேற்றக்கூடிய பலகாரியங்களில் உங்கள் பரிபூரண ஒத்துழைப்பையும், ஆசீர்வாதங்களையும் எதிர்ப்பார்க்கிறேன்.

மகாநாட்டின் அவசியம். சிறிது நேரத்திற்குமுன் நம் வரவேற்பு சபைத்தலைவர் அவர்கள் எடுத்து கூறியபடி, தென்னிந்தியா பூராவும் சிதறிக்கிடக்கும் வீரசைவ ஜங்கமர்கள் ஒற்றுமைப்பட்டு, முன்னேறுவதற்கு இத்தகைய மகாநாடுகள இன்றியமையாததே. தென்னிந்தியாவெங்கும பலஜில்லாக்களில் வீரசைவ ஜங்கமர்கள் சங்கங்கள்கூட்டி அரும்பாடுபட்டு வருகிறார்கள், சென்ற பல ஆண்டுகளாகவே நம்மவர்களிடையே இவ்வுணர்ச்சி ஏற்பட்டதன் பயனாக, சேலத்திலும், திருச்சியிலும் பல மகாநாடுகள் நடைபெற்றன. தொழிலின் காரணமாக பல இடங்களுக்குச்சென்று, பல தொழிலில் ஈடுபட்ட வீரசைவ ஜங்கமர்கள் நாளடைவில் தங்கள் ஆசாரங்களை மறந்து, தங்கள் மதத்தைப்பற்றி ஒன்றும் அறியாதவர்களாய், தாங்கள் வீரசைவ ஜங்கமர்கள், லிங்காயுதர்கள் என்று சொல்லிக்கொள்வதற்கும் தகுதியற்றவர்களாய், பிரியப்

படாதவர்களாய் இருப்பதைக்காண்கிறோம்! ஒப்புயர்வற்ற வீரசைவ மதத்தில் ஜனித்த நம்மவர்களுக்கு இந்நிலைமை ஏற்பட்டது பரிதபிக்கத்தக்கதேயாகும். வடநாட்டிலும், மத்திய இந்தியாவிலும், நைஜாம் ராஜ்ஜியத்திலும் மிகுதியாகக் காணப்படுகிற வீரசைவ லிங்காயுதர்கள் பாஷையின் காரணமாக தென்னாட்டிலிருக்கும் வீரசைவ லிங்காயுதர்களை அந்நியர்களெனக்கருதுகிறார்கள். அவர்களையும் தென்னிந்தியாவில் உள்ளவர்கள், தங்கள் குலத்தினர்கள் என்று நினைக்கின்றார்களில்லை. பாஷை காரணத்தினால் விளைந்த இவ்வேறுபாடுதான் இப்படியென்றால், தென்னிந்தியாவில் ஒரேபாஷைபேசும் வீரசைவமக்களிடமேனும் "நாமெல்லாரும் ஒருகுலம்" என்ற உணர்ச்சி இருக்கின்றதா? அந்தோ! இல்லை. வைர வியாபாரம் செய்தவர்கள் ஒருவகை என்கிறார்கள். பவழ வியாபராம் செய்தவர்கள் ஒரு பிரிவென்கிறார்கள். உப்பு விற்றவர்கள் ஒரு கூட்டம் என்றும், பருப்புவிற்றவர்கள் ஒரு கூட்டம் என்றும் தனித்து நிற்கிறார்கள். இத்தனைக்கும் காரணம் இவர்கள் எல்லோருக்கும் பொதுவாயிருக்கும், இவர்கள எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கும், வீரசைவமதத்தின் தத்துவத்தை உணராததேயாகும். வீரசைவ மதத்தின் போதனைகளையும் கொள்கைகளையும் அதனைப் பன்னிரண்டாவது நூற்றாண்டில் புணருத்தாரணம் செய்த மகாபுருஷர், அவதார புருஷர் பசவேஸ்வரரை, அவருடைய அரிய போதனைகளை அறியாதிருப்பதே இந்நிலைமைக்கு முக்கியகாரணம்.

வீரசைவ மக்கள் ஒருகாலத்தில் அரசர்களாய் ஆண்டுவந்தவர்கள் தான். இன்னும் மைசூர் ராஜதானியை ஆண்டுவரும் மாட்சிமை தங்கிய மன்னர் வீரசைவ லிங்காயுத பரம்பறையில் வந்தவர்கள்தான். மைசூர் அரசாங்கத்தின் பலபெரிய, தேவஸ்தானங்களில் வீரசைவ ஜங்கமர்கள் தான் ஸ்தானிகப்பதவியில் இருந்து வருகிறார்கள். சேலம் ஜில்லாவைச் சேர்ந்த ஓசூர், கிருஷ்ணகிரி தருமபுரி தாலூக்காக்களும், பெங்களூரைச் சேர்ந்த ஓசக்கோட்டை, ஆனைக்கல் தாலூக்காக்களுமாகச் சேர்ந்து ஓர் வீரசைவ ராஜ்யமாக இருந்தன, இப்போது ஆனைக்கல்லில் வசிக்கும் ஸ்ரீ பல்லேகார். எஸ். எம் வீரசிங்கராயர் அவர்களுடைய முன்னோர்கள் அந்நாட்டை ஆண்டவர்கள். அவர்கள் அரசர்களாயிருந்தபோது அவர்களால் கட்டப்பட்ட கோட்டை, ஏரிகள், தேவாலயங்கள் இன்றும் இருக்கின்றன. திப்புசுல்தான் காலத்தில் தான் இவர்கள் ராஜ்யம் இழந்தார்கள். இப்போது மைசூர் அரசாங்கத்திலிருந்து (Political Pension) உபகாரச்சம்பளமும் பெற்று வருகிறார்கள். இம்மாதிரியே

சோண்டா, புங்கனூர், நீலகிரி, ஆகல்வாடி, சூலகிரி, பேரிகை, கௌதி முதலிய இடங்கள் ஒருகாலத்தில் வீரசைவ ராஜ்யங்களா யிருந்தன. வீரசைவர்களில் அறிவாளிகள் பலரும் இருந்திருக்கிறார்கள். தமிழுக்கே சிறப்பைக்கொடுக்கும் "பிரபுலிங்கலீலை" போன்ற அரிய நூல்கள் எழுதியது வீரசைவர்களே. சென்னைப்பட்டணம் ஜில்லாவிலும் இன்னும் பல தாலூக்காக்களிலும் ஜங்கம சுரோத்திரிகங்கள், ஜங்கமகிராமங்கள் பல காணப்படுகின்றன. இன்றும் ஜங்கமர்கள் எவ்வித வரியும் இன்றி எதேச்சாதிகாரமாய் அவைகளை அனுபவித்து வருகிறார்கள் என்பது நீங்கள் அறிந்ததே. ஒருகாலத்தில் இவ்வளவு உன்னத பதவியிலிருந்தவர்கள் இன்று சீர்குலைந்து காணப்படுவதற்குக் காரணம் என்ன? இத்தகைய மகாநாடுகள் அடிக்கடி கூட்டி ஒருவரையொருவர் அறிந்து சகோதரத்துவத்தை பலப்படுத்திக்கொள்ளாது, அவரவர்கள் இருந்த இடத்திலேயே அவரவர்கள்காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததேயாகும். சுமார் 25, 30 வருஷங்களாக எனக்குச் சென்னையிலிருக்கும் நம்மவர்களில் சில பிரமுகர்களைத் தெரியும். பர்மாவில் உத்தியோகம்செய்து, இங்கு உபகாரச்சம்பளம்பெற்று வாழ்ந்துவந்த காலஞ்சென்ற ஸ்ரீ அருணகிரி அய்யா அவர்கள் 25 வருடங்களுக்கு முன்பே இத்தகைய மகாநாடுகளைக் கூட்டவேண்டுமென்ற ஆவல்கொண்டிருந்தார். அவருடைய எண்ணம் இன்று நிறைவேறி இம்முதல் மகாநாடு ஆரம்பமாயிற்று. இதைப்பலப்படுத்த கிராமசபைகள் ஓயாமல் உழைக்க வேண்டும். கிராம ஜங்கமர்கள் அனைவரும் இதில் அங்கத்தினர்களாகி இம்மகாநாடுகளைச் சிறப்பிக்கவேண்டும். இம்மகாநாடுகளை பலப்படுத்தி இதை உன்னத நிலைக்குக் கொண்டுவரும் பொறுப்பும், கடமையும் மகாஜனங்களாகிய உங்களிடம்தான் இருக்கிறது. குலத்தொண்டை சிவத்தொண்டாக நினைக்கவேண்டும். ஜங்கம சகோதரர்களே! உங்கள் குலத்தொண்டை திரிகரணசுத்தியுடன் மேற்கொண்டால் நாட்டிற்குச் செய்யவேண்டிய தொண்டில் பெரும்பாகத்தையும் செய்து முடித்தவர்களாவீர்கள். ராணுவம் பல டிவிஷன்களாய்ப் பிரிந்திருப்பதைப்போல் நம் நாட்டில் காணப்படும் இப்பிரிவுகள் ஒவ்வொன்றும் ஒரு டிவிஷனாகும். இப்பிரிவுகள் சீர்திருத்தப்பெற்று, ஒற்றுமையும், முன்னேற்றமும் அடைந்தால் முறையே நாடும் முன்னேற்றமடையுமென்பதில் சந்தேகமென்ன?

வீரசைவ மதம்.

நாம் சிறப்பாக மேற்கொண்டொழுகும் வீரசைவமதம் ஓர் ஒப்புயர்வற்ற மதமாகும். நம்முடைய வருணனைகளாலும், நாம் பெருந்தொகையினராக அதை மேற்கொண்டதினாலும் அதற்குச் சிறப்புவந்து விடவில்லை அதன் கொள்கைகளும், உயர்ந்த தத்துவங்களுமே அதன் ஒப்புயர்வற்ற சிறப்பிற்கு முக்கிய காரணமாகும். உலகத்தில் மற்ற நாடுள்க எல்லாம் அஞாகரீகத்தில் மூழ்கி மக்கள் வாழ்க்கை அடைவதற்கு முன்பே மதம் இன்னதென்பதை அடையாதிருந்த காலத்திலேயே, இந்தியா உயர்ந்த நாகரீகம் சிறந்த மதம், இல்லற இன்பவாழ்க்கை பெற்று உலகத்திற்கே வழிகாட்டியாக இருந்ததை தேச சரித்திரத்தில் காண்கிறோம். சரித்திரகாலத்திற்கு முந்தியே நம் நாட்டில் சிறப்புற்றிருந்த மதங்களுள் நாம் சிறமேற்கொண்டிருக்கும் வீரசைவமதம் தலைமைவாய்ந்தது. பெருமைவாய்ந்த இம்மதத்தைப்பற்றி விரிவாக எடுத்துக்கூறும் ஆற்றல் அடியேனுக்கில்லையேனும் அறிந்த அளவில் அதைப்பற்றி பிரஸ்தாபிக்க முயலுகின்றேன்.

வீரசைவமதம் உலகத்தில் தொன்மைவாய்ந்தது சமரச நோக்குடையது. பல ஆயிரம் வருஷங்களுக்கு முன்பே உலகம் முழுவதும் பரவி உச்சம் பெற்றது. உலகமுழுவதும் சைவசமயம், சைவநெறிகள் புகட்டும் மக்களும், சிவாலயங்களும் நிலைத்திருந்தன என்பதற்கு எத்தனையோ சான்றுகள் உண்டு. தென் அமெரிக்காவில் ஒரு பெருங்காட்டைவெட்டி நிலத்தைப் பண்படுத்தும் முயற்சிசெய்தபோது பூமிக்குள் புதைந்துகிடந்த ஒரு சிவாலயம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தியாவிற்குத் தெற்கே லெமூரியா என்னும் ஒரு பெரும் நிலப்பரப்பு இருந்தது அது பல ஆயிரம் வருஷங்களுக்கு முன்பே இந்துமகா சமுத்திரத்தில் மூழ்கிவிட்டது. லெமூரியாதீவில் வாழ்ந்துவந்த மக்கள் சைவ சமயத்தினர்களென்றும், இந்நிலப்பரப்பு நீரில் மூழ்கியபோது இம்மக்களுள் சிலர் தென்னிந்தியாவிற்கும், இந்தியா ஆப்பிரிக்கா நிலத்திலிருந்து ஆப்பிரிக்கா வழியாக ஐரோப்பாவிற்குச் சிலரும், ஆசியா ஐரோப்பா வழியாக அமெரிக்காவிற்குச் சிலருமாய் குடியேறிவிட்டார்கள். கடலுக்குள் மறைந்த லெமூரியா கண்டத்திலே குமரிநாடு என்னும் பாகத்திலே இருந்த மஹேந்திர மலையே இவர்களுக்கு முக்கிய வாசஸ்தலமாயிருந்தது. இதையொட்டியே குமரிமுனை என்னும் பெயரும் இந்தியாவின் தென்கோடிக்கு ஏற்பட்டிருக்கிறது.

லெமூரியாவிலும் தென்னிந்தியாவிலும் வாழ்ந்துவந்த மக்களுடைய சமயக்கொள்கை சைவசித்தாந்த கொள்கையேயாகும். படகுகளின் துணைகொண்டு உலகின் பல பாகங்களுக்குத் தப்பியோடிய மக்கள் தம்முடனே தம் சமயநூல்களையும் கொண்டுபோயினர். தப்பியோடிய குமரிநாட்டு மக்களுள் சிலர் பழைய பிரட்டன் தேசத்திற்கும் சென்று குடியேறலானார்கள். இவர்களால் அக்காலத்திலேயே பிரிட்டனில் சைவசமயக் கொள்கைகள் பரப்பப்பட்டன. இந்தக் குடியேறிய குமரிநாட்டு மக்கள் பிரிட்டனில் "ட்ரூயிட்" என்னும் பெயரால் அழைக்கப்பட்டார்கள். "ட்ரூயிட்" வம்சத்தார்கள் பல நூற்றாண்டுகளாய் ஐரோப்பியமக்களுக்கு சமய நெறியை போதிக்கும் ஆசிரிய பதவியிலிருந்தார்கள். ஐரோப்பாவில் உயர்ந்த தத்துவ ஞானிகள், அறிவாளிகள் என்று போற்றப்பட்ட ஏன் உலக முழுவதும் போற்றும் அறிவாளிகளாகிய பித்தகோரஸ், பிளேட்டோபோன்ற பெரியோர்களுக்கும் பிரிட்டனில் வாழ்ந்த "ட்ரூயிட்" வம்சத்தார்களே வழிகாட்டியாயிருந்தார்கள் என அவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரங்கள் காட்டுகின்றன. பண்டைய கிரேக்கர்கள், பிரிட்டிஷ் "ட்ரூயிட்" மக்களிடமிருந்தே தங்கள் தத்துவங்களைக் கற்றார்கள் என்று பிளேட்டோவின் மாணவரான அரிஸ்ட்டாட்டில் சொல்லியிருக்கிறார். எனவே பழங்காலத்தில் பிரிட்டன், கிரீஸ் இந்த இரண்டு நாட்டுக் கொள்கைகளும் சைவசித்தாந்தமேயாகும் என்பது வெள்ளிடைமலை. பிளேட்டோவின் கொள்கை சைவசித்தாந்தத்தை மிக ஒத்திருக்கிறது. சிரியா, கால்டியா, எகிப்து முதலிய நாடுகளிலும் சைவசமயம் பரவியிருந்ததென்பதற்கு பல ஆதாரங்கள் உண்டு இவ்வாறாக உலகமுழுவதும் மற்ற எச்சமயக் கொள்கைகளும் கனவிலும் கருக்கொள்ளுமுன்பே, சைவசித்தாந்தம் உலகில் பல பாகங்களில் பரவி நின்றதென்றால் அதன் பண்டைய உயர்வைப்பற்றி சொல்லவும் வேண்டுமா?

சைவசமயத்தின் தொன்மையையும் முதன்மையையும் நிலைநாட்ட இத்தகைய உலக சரித்திர ஆதாரங்களேயன்றி, நம்நாட்டுக்காவியங்கள், கல்வெட்டு சாசன ஆராய்ச்சி முடிவுகள் பல உண்டு. இந்திய அரசாங்க கல்வெட்டு இலாகாவில் தலைவரான "சர்ஜான்மார்ஷல்" என்பவர் சிந்து பஞ்சாப் முதலிய இடங்களில் பூமிக்குள்ளிருந்து தோண்டியெடுத்த பல பொருள்களின் ஆராய்ச்சியிலிருந்து சைவசமயமானது செம்புக்காலத்தினது இன்னும் சொல்லப்போனால் உலகில் தோன்றியுள்ள எல்லா சமயங்களுக்கும் மிகப்பழமையானது என்று கூறுகிறார். இந்நாட்டு

பண்டைய காவியங்களாகிய மகாபாரதம், இராமாயணம்போன்ற பழய நூல்களில் அக்காலத்து மக்களிடம் லிங்கபூஜை பழக்கத்திலிருந்து வந்ததென்பதற்கு, சேதுகரையும், ராமேஸ்வரமும் அழிக்கமுடியாத ஆதாரங்களாக இருக்கின்றன. இராமாயணத்தின் கதாநாயகரான ஸ்ரீ ராமபிரானே சிவலிங்கத்தைப் பூசித்து அந்த இடம் இராமேஸ்வரமென்ற க்ஷேத்திரமாயிற்றென்றால், சைவத்தின் தொன்மையைப்பற்றி நிர்ணயிக்க கல்வெட்டு ஆராய்ச்சிகளும், மற்றஆதாரங்களும் வேண்டுமா?

வேதம் உபநிஷத்துகளைப்போல், சைவமும் சைவாகமங்களும் தொன்மைவாய்ந்ததே வீரசைவம் வேத உபநிஷத்துகளை ஆதாரமாககொண்டதெனினும் வேதத்தில்காணும் கர்மகாண்டம் வீரசைவத்தால் புறக்கணிக்கப்பட்டது. உபநிஷத்துக்களால் வலியுறுத்தப் பெறும் வேதத்தின் ஞானகாண்டம் வீரசைவத்திற்கு அஸ்திவாரமாகும். சைவாகமங்களும் உபநிஷத்துகளைப்போல் ஒப்புயர்வற்றவை. பரப்பிரம்மமாகிய சிவனைத்தவிர வேறு தெய்வமில்லையென வீரசைவம் கர்ஜிக்கிறது. தன்னைத்தானே தியாகம் செய்யும் தன்மையையே வற்புறுத்துகிறது. ஜீவாத்மன் உலகபாசத்தைச் சிறுகச்சிறுகக்களைந்து இறுதியில் பரமாத்மனிடம் ஐக்கியமாவதே சிவலிங்க ஐக்கியமாகும். இதையே எல்லா மார்க்கங்களும் போதிக்கின்றன. "த்வைதம்" கடவுள்வேறு தான்வேறு என்றும், "அத்வைதம்" கடவுளும் தானும் ஒன்று என்றும் வாதிக்கின்றன. இவ்விருவாதங்களையும் வீரசைவம் சமரசப்படுத்துகிறது. த்வைதத்தில் ஆரம்பித்து அத்வைதத்தில் இறங்குவதே வீரசைவ மார்க்கம்.

வேதத்திற்கும், உபநிஷத்துகளுக்கும். ஆகமங்களுக்கும் தொடர்பு இருப்பதுதான். மதங்களின் மேன்மைக்கும் தாழ்மைக்கும் காரணமெனக் கருதுவதற்கு இடமில்லை. மக்களுக்குக் கடவுள் உணர்ச்சி, ஒழுக்கம், தியாகபுத்திபோன்ற அறிய குணங்களை உணர்ச்சிகளை உண்டாக்கும் சாதனங்களே சமயமாகும். மக்களை இத்தகைய மேலான உணர்ச்சிகளில் ஈடுபடுத்துவதைத்தவிர சமயங்கள் செய்வது வேறு என்ன இருக்கிறது. வேறு இருப்பின் அவைகள் நிலைபெற்று இருக்காது நாம் சாப்பிடும் ஆகாரங்கள் பல வகைப்பட்டதும், பல சுவையுள்ளதாயிருப்பினும் அவைகள் ஒவ்வொன்றும் உடல்நலத்துக்காக பலபேரால், பல வருஷங்களாய் ஆராய்ந்து அனுபவித்து முடிவாக்கப்பட்டதாகும். உதாரணமாக உளுந்தை எடுத்துக்கொண்டால் அப்பதார்த்தம் மக்கள் ஆகாரங்களில் இன்றியமையாததென்று சித்தாந்தப்படுத்துவதன்முன்

எத்தனையோ ஆராய்ச்சிகளுக்கும் சோதனைகளுக்கும் உட்பட்டிருக்க வேண்டும். ஆராய்ச்சியில்மட்டும் அல்ல ஆராய்ச்சியின் முடிவு. அனுப வத்திலும் நிலைபெற்றாலொழிய, அது சித்தாந்தப்படுத்தப்படுவதில்லை. இதைப்போலவே சமயநெறிகளும் சித்தாந்தப்படுத்தப்படுகின்றன. செட்டியார் முடுக்கால் அல்ல, சரக்கு முடுக்கால்தான் சரக்குக்கு நல்லவிலை. சரக்கு நன்றாயிருந்தால் நல்லவிலைமட்டும் அல்ல அதற்குத் தேவையும் அதிகரிக்கும். உலகம் பெரியகடை அதில் சமயநெறிகள் என்ற சரக்குகள் பலவகைப்பட்டிருக்கின்றன. நல்ல சரக்குக்குத்தான் நல்லவிலை. எல்லோரும் அதை நாடிச் செல்வார்கள். அனாதி காலத்திலிருந்து நாளதுவரையில், அரசாங்க ஆதரவுகளின்றி, நவீனபாட்டுகளும் விளம்பரங்களும் இன்றியே சைவசமயம் தலைசிறந்து விளங்குவதொன்றே அதன்மேன்மையை நிலைநாட்டுகிறது. சைவசமயம் பலமுறை, பல அரசாங்கங்களாலும் நசுக்கப்பட்டது. மகம்மதியர் ஆட்சியில் சிவாலயங்கள் பட்டபாட்டிற்கு அளவுண்டோ? சைவத்திற்குச் சிறந்த க்ஷேத்திரமாகிய காசிவிஸ்வநாதர்கோயில் எத்தனைமுறை தரைமட்டம் ஆக்கப்பட்டது. ஆயினும் என்னவாயிற்று? இன்று சைவமும் க்ஷேத்திரமும் மறைந்துவிட்டதோ? உண்மையை யாரால் மறைக்கமுடியும்? அழிக்கவும் முடியும். வீரசைவம் சைவாகமங்களை அடிப்படையாகக்கொண்டுள்ளது. இவ்வாகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு படிகளை வகுத்து, அதன் சாதனங்களால் மக்களுக்கு மோக்ஷமார்க்கத்தை எளிதாக்குகிறது, வீரசைவமதம் அன்பையே பீடமாகக் கொண்டுள்ளது. சமத்துவமே அதன் ஆபரணங்களாகும். வீரசைவம் 28 ஆகமங்களை அங்கீகரிக்கின்றது. வீரசைவர்களின் நியமனங்களும், அநுஷ்டானங்களும் 64 சீலங்களில் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளெல்லாம் பொதுவாக கடவுள்பக்தி, குருபக்தி, லிங்கபூசை, ஜங்கசேவை, வாழ்க்கைத் தூய்மை, ஜீவகாருண்யம், மதுபானம் செய்யாமை, நிஷ்டை, அன்பு, சமத்துவம், சகோதரத்துவம் முதலியவைகளை வலியுறுத்துகின்றன. சைவாகமங்களின் உயர்ந்த தத்துவங்களை வகுத்து நிலைநாட்டிய ஆதி ஆச்சாரியர்கள் ஐவருள் ஸ்ரீரேணுகாச்சாரியார் ஒருவராவர். அகஸ்திய முனிவருக்கு வீரசைவாகமங்களை போதித்தவர் ஸ்ரீ ரேணுகாசாரியரே யாவர். இவ்வாச்சாரியர்கள் ஒவ்வொருயுகத்திலும் ஒவ்வொருபெயரால் தோன்றுகிறார்கள்.

பஞ்சாசாரியர்கள்.

கலியுகத்தில் இவர்கள் ரேவணாராத்திரியார், மருளாராத்திரியார், ஏகோராமாராத்திரியார் பண்டிதாராத்திரியார், விஸ்வாராத்திரியார் என்றும் திருநாமங்களால் வழங்குகிறார்கள். வீரசைவ சமயதேவர்களாகிய இப்பரம்பரை, சிவலிங்கத்தின் பஞ்சமுகங்களிலிருந்து பஞ்ச ஆசாரியர்களாக உதித்தவராவார்கள். வீரசைவ மக்கள் பரம்பரைக்கு இவர்களே ஆதி புருஷர்கள். வேதமதத்தைப் பின்பற்றுபவர்கள்.

பஞ்ச மடங்கள்.

தம்குலத்தின் உயர்வை நிலைநாட்ட ரிஷிகோத்திரங்களைத் தழுவுவதைப்போல், வீரசைவமக்கள் இவ்வாச்சாரிய பரம்பரையைத் தழுவுவது இயல்பு. இவ்வைந்து ஆச்சாரியர்களுக்கும் முறையே ஐந்து பீடங்களும் உண்டு. மைசூர் மாகாணத்திலுள்ள "ரப்பாபுரியும்," பல்லாரி ஜில்லாவிலுள்ள "யுஜ்ஜயினியும்" கர்நூல் ஜில்லாவில் உள்ள "ஸ்ரீசைலமும்" "காசி" க்ஷேத்திரமும், இமயமலையிலுள்ள "கேதாரமும்" பஞ்சமூர்த்திகளின் பஞ்சமடங்களாகும், இப்பஞ்சமூர்த்திகள் பஞ்ச மடங்களின் மூலம், பல மடாதிபதிகளும், பட்டாதிகாரிகளும், சரபதிகளும் வீரசைவ உலகத்தை ஆண்டுவருகிறார்கள். சமய ஆட்சியில் மாத்திரமேயன்றி அரசியலிலும், சமூக சீர்திருத்தங்களிலும் இம்மடங்கள் போற்றத்தக்க சீர்திருத்தங்களை அக்காலத்திலேயே நடத்திக்காட்டியிருக்கின்றார்கள்.

வீரசைவர்களிடையே எல்லாத்தொழிலாளிகளும் உண்டு. ஆனால் தொழிலைப்பற்றிய வேறுபாடுகளின்றி, உயர்வுதாழ்வின்றி எல்லோரும் எத்தொழிலைச் செய்பவராயினும் சமத்துவமாய்,சகோதரபாவனையுடன் வாழ்ந்து வருகிறார்கள். இதனால் இச்சமூகம் மற்றவர்களின் உதவியை எதிர்ப்பார்க்காத ஒரு சுதந்தரம் பெற்ற சமூகமாய் நிலைபெற்றுவந்தது. கொலை, குடி, இம்சை, வஞ்சகம், விபசாரம் போன்றவைகளுக்கு சம்மந்தப்பட்ட தொழிலாளிகள் இச்சமூகத்தில் இல்லை. தொழில் முறையில் ஜாதிவேற்றுமையில்லாததினால் இவர்களுள் புரோகிதர்கள் என்னும் தனிக்கூட்டம் ஒன்றில்லை. வீரசைவர்கள் சுத்தசைவர்கள், ஜீவ காருண்ய மூர்த்திகள்.

வீரசைவ மதத்தில் மதக்கட்டளைகளைப் பார்க்குமிடத்து, பால் பேதமின்றி, ஆண்களும் பெண்களும் வயதுபேதமின்றி குழந்தைகளும் முதியோர்களும் லிங்கதாரணை பெறுகிறார்கள். ஸ்திரீகளுக்கு

ஆண்களுக்கிருப்பதுபோல் சம உரிமைகள் உண்டு. எல்லோரும் தினமும் பூஜை, நிஷ்டை செய்யவேண்டுமென கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். வீரசைவமக்களுக்குள் பஞ்ச சூதகங்களில்லை. தீட்டு என்பது அர்த்தமற்றது. சமத்துவம், சகோதரத்துவம் இவ்வ தப்பில் உச்சம்பெற்றிருக்கிறதெனலாம். வீரசைவர்கள் மணச்சடங்குகளிலும், மரணச்சடங்குகளிலும், இவைகள் இன்னும் காணப்படுகின்றன.

ஸ்ரீ பசவேஸ்வரர்.

வேதங்களை ஆதாரமாகக்கொண்ட மதத்தைத் தழுவிய மக்களிடையே வருணாசிரமக்கொடுமைகள் அதிகரித்தன ஜாதிவேற்றுமைகள் தலைவிரித்தாடின, புரோகிதக் கொடுமைகள் சகிக்க முடியாததாய்ப் போய்விட்டன கடவுளைப் பூஜிப்பதை பொருள்பறித்து ஏமாற்றும் தொழிலாக புரோகிதக் கூட்டத்தார் மேற்கொண்டார்கள். மதகிரந்தங்களை பெண்களும் மற்ற தொழிலாளர்களும் படிக்கலாகாதென தடுக்கப்பட்டார்கள். மதத்தின் பெயரால் கடவுளின் பெயரால் "யாகங்கள" என்றும் பெரும் கொலைகள் நடைபெற்ற. மக்களுக்கு நன்மையேசெய்யும் ஏழைப்பிராணிகளாகிய பசு, ஆடுபோன்ற மிருகங்கள் ஆயிரக்கணக்கில் பலியிடப்பட்டன. இத்தகைய அதர்மங்கள் மேலிட்டபோது அதைச் சமரசப்படுத்த, அதர்மங்களை அடக்க, யாகபலிகளின்று ஏழை பிராணிகளைக் காப்பாற்ற. மக்களிடையே மிதமிஞ்சி பரவியிருந்த ஜாதிவேற்றுமை உணர்ச்சியைப்போக்கி சகோதாத்தவத்தை நிலைநாட்ட ஒரு அவதாரம் தோன்றவேண்டியிருந்தது, 12-வது நூற்றாண்டில், கல்யாணபுரியில் விச்சலராஜன் அரசாண்ட காலத்தில், ஸ்ரீபசவேசர் அவதரித்தார் இவர் சிலகாலம் மந்திரிபதவியிலிருந்து, பின் தன் வாழ்நாள் பூராவும் வீரசைவமத முன்னேற்றத்திற்சென உழைத்துவந்தார். இவரது பெரு முயற்சியால் இந்தியா முழுவதும் இம்மதம் பரவியது ஆயிரக்கணக்கானமக்கள் வீரசைவர்களானார்கள். ஜாதிபேதமின்றி பசவேஸ்வரர் எல்லோருக்கும் லிங்கதாரணை செய்துவந்தனர். அச்சமயம் புரோகிதக்கொடுமை, பிராமணீயக் கொடுமைகளால் நசுக்கப்பட்டவர்கள் லிங்கதாரிகள் ஆகி ஆறுதல் பெற்றார்கள் ஸ்ரீ பசவேஸ்வரர் காலத்தில் வீரசைவம் உன்னதநிலை அடைந்ததினால், வீரசைவமதம் பசவேஸ்வரர் காலத்தில் தோன்றியதென பலர்கருதவும் இடங்கொடுத்தது. வீரசைவமதத்தில் அவதாரமாகத் தோன்றிய ஸ்ரீ பசவேஸ்வர

ரைப்பற்றி வீரசைவ மக்களுள் பெரும்பான்மையோர் அறியாதிருக்கிறார்கள். அவருடைய சரித்திரத்தை ஒவ்வொருவரும் படிக்கவேண்டும்.

லிங்கதாரணை.

வீரசைவர்களுள் ஆண், பெண், குழந்தை, வயோதிகன், தனவந்தன், ஏழை, அறிவாளி, பாமரன் என்ற வித்தியாசமின்றி எல்லோரும் சதாதம் உடலில் அணிந்து வருவது லிங்கமாகும். வீரசைவமதத்திற் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஐந்தாவதுவயதில் லிங்கதாரணை நடைபெற்றாகவேண்டும். இம்மதத்தில் பஞ்சசூதங்கள் தீட்டு, விழுட்பு" இல்லாததால், இவர்கள் எப்போதும் லிங்கத்தைத்தம் மேனியில் அணிந்து, தினமும் மனம்குளிர பூசைசெய்து தியானமும்செய்ய வசதியிருக்கிறது, ஆகமவிதிப்படி லிங்கதாரணை மதக்குருக்களாலும் சரபதிகளாலும் நடைபெறவேண்டும். வீரசைவமக்கள் லிங்கமூர்த்தியைவிட்டு வேறெந்தமூர்த்தியையும் மனதில் நினையாது சதா அதே தியானத்தில் வைராக்கியமாய் இருப்பதனால் சைவர்களுக்கும் இவர்கள் மேம்பட்டவர்களாவார்கள். லிங்கவழிபாடு, லிங்கபூசை இந்நாட்டிற்கும், இம்மதத்திற்குப் நூதனமானதல்ல. தேவர்களும், ரிஷிகளும், மற்ற அறிவாளிகளும், லிங்கபூசைசெய்து மோக்ஷசாம்ராஜ்யத்தை அடைந்திருப்பதாக நம் புராணங்களும் கோஷிக்கின்றன. ராமாயணம், மகாபாரதம்போன்ற காவியங்களில் சிலாக்கித்துச் சொல்லப்படும். ஸ்ரீராமன், பாண்டவர்கள்போன்றவர்களும், லிங்கபூசையினால் தங்கள் பாபத்தைப்போக்கி பேரின்பத்தை அடைந்திருக்கிறார்கள். இத்தகைய பாக்கியம் வீரசைவ மக்களுக்கு வலிய கிடைத்தும், பலர் அதைப் பயன்படுத்திக்கொள்ளுகின்றார்களில்லை. லிங்கதாரணைபெறாத வீரசைவர் பாவியாக கருதப்படுகிறார்.

வீரசைவ மக்கள் சதாமேனியில் அணிந்து சிறப்பாகப் பூசித்து வரும் லிங்கவடிவம் எதைக்குறிக்கிறது? லிங்கவடிவத்திலிருந்து நாம் அறிந்துகொள்வதென்ன? பிரணவ மந்திரத்தின் உருவமே லிங்கமென்றும், நாதபிந்து அடங்கிய ஓங்கார ரூபமே லிங்கமென்றும் ஒரு சாரார் கூறுகின்றார்கள். அது எவ்வாறாயினும் சாமான்ய ஆராய்ச்சிக்கும் வீரசைவத்தின் கொள்கைக்கும் பொருத்தமாயிருப்பதை நீங்கள் காணலாம். கடவுள் ஒருவர் உண்டென்பதும், அவருடன் இரண்டறக் கலப்பதே மக்களின் முடிவான லக்ஷியமென்பதும் மறுக்கொணாத உண்மை·

கடவுளுடன் இரண்டற கலந்துகொள்ள மோக்ஷபிராப்தியடைய இடை விடாது அவன் தியானத்தில் ஈடுபடவேண்டும்! தியானம் கைகூட ஆரம்பத்தில் ஒரு உருவம் இன்றியமையாததென்பதை அதில் ஈடுபட்டவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். ஆகவே லிங்கதாரணம்பெற்று அதில், முறைப்படி நடந்துகொள்வோமானால், ஸ்தூல, சூக்கும, காரண, உடல்கள் முறையே வேததீக்ஷை, மந்திரதீக்ஷை, கிரியாதீக்ஷைபெற்று அதன் பயனாக ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் விலக்கப்பட்டு அந்த ஸ்தானங்களில் சிவயோகம், பிராணலிங்கம், ஸ்தலலிங்கம் அடைவதால் லிங்கதாரி பிரகிருத பிரம்ம நிலையைப்பெற்று சித்தி பெறுகிறான்.

வாலிபர்களின் கடமை.

சமூக முன்னேற்றத்திற்கும் வாலிபர்களுக்கும் விலக்கமுடியாத சம்பந்தம் இருக்கின்றன. வாலிபர்கள், யுவதிகள்தான். சமூகத்தின் அஸ்திவாரங்களாவார்கள். இவ்வஸ்திவாரம் பலப்படாதவரையில் கட்டடமாகிய சமூகம் தள்ளாடிக்கொண்டுதான் இருக்கும். வீரசைவமக்கள், வாலிபர்கள் தமிழ்நாடெங்கும் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்களெனினும் நூற்றுக்கணக்கானவர்கள்கூட மேல்படிப்பிற்கு வராமலிருப்பது வருந்தத்தக்க விஷயம் நகரத்திலிருப்பவர்களாயினும் கிராமத்திலிருப்பவர்களாயினும் இதில் வித்தியாசமின்றியே இருக்கிறார்கள். கர்னாடக தேசத்தில் பலபேர் படித்து பட்டதாரிகளாயிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் உள்ள வீரசைவர்களில், வெகுசிலரே மேல்படிப்பு படித்து பட்டதாரிகளானார்கள். இன்னும் பல வாலிபர்களும், யுவதிகளும் மேல்படிப்பு படித்து பட்டதாரிகளாகவேண்டும். வாலிபர்கள் படித்து பல தொழில்களில் ஈடுபட்டு விடாமுயற்சியுடன் பொருள் சம்பாதிக்கவேண்டும். சிறுவயதில் சோம்பித்திரிவது சமூகத்திற்கும் அவர்களுக்கும் துரோகம் செய்வதாகும். இக்காலத்தில் பணமில்லாதவன் பிணமாகக் கருதப்படுகிறான். "அருளிலார்க்கு அவ்வுலகமில்லை. பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை." சமய ஆசாரங்களை சிரத்தையாக மேற்கொண்டு நடக்கவேண்டும். உடலை உரம்பெற வளர்த்து வலியும் ஆண்மையும் பெறவேண்டும் தக்க உடல்பலம் பெற்றிருந்தால்தான் நன்றாக உழைக்கவும், நுட்பமான வேலைகளில் ஈடுபடவும், தொழிலை ஊக்கமாக நடத்தவும் முடியும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை தக்கமுறையில் படிப்பில், தொழிலில் ஈடுபடுத்தவேண்டும்.

தாய்மார்கள்.

வீரசைவ மதத்தில் உதித்த தாய்மார்களுக்கு பிறப்புரிமையாக் பல உரிமைகள்கிடைத்தும், அவைகளைத் தக்கமுறையில் பயன்படுத் திக்கொள்கின்றார்களில்லை. குழந்தைகளை வளர்த்து, வாலிபர்களாக்கி சமூகத்திற்கு ஒப்புவிக்கும் பெரும்பொறுப்பு தாய்மார்களிடம்தான் இருக்கிறது. குழந்தைகள், வாலிபர்கள், மேல் படிப்பிற்குப் போவதற் கும், தக்கதொழில்களை ஏற்று ஊக்கமாய் நடத்துவதற்கும் தாய்மார் கள் அளிக்கும் உபதேசங்களே முக்கியமாகும். "தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்பதுபோல், தாய்மார்கள் குழந்தைகளை எவ்வாறு பழக்குகிறார்களோ அவ்வாறே குழந்தைகளின் குணம் அமைகின்றன. ஆதலால் தாய்மார்கள் குழந்தைகளை வளர்க்கும் விஷயத்தில் பெரிதும் கவலைசெலுத்தி, ஒவ்வொரு குழந்தையையும் தக்க வீரசைவனாக்கி சமூகத்திற்குத் தங்கள் கடமையைச் செய்வார்களாக.

தமிழ்நாடும் வீரசைவர்களும்.

ஒப்புயர்வற்ற இச்சிறந்த வீரசைவமதம் அந்தோ! தமிழ்நாட்டில் என்நிலைமையடைந்திருக்கிறது. வீரசைவமக்கள் எப்பதவியிலிருக்கிறார் கள். கல்வியின்றி, சமயவளர்ச்சியின்றி, ஆசாரமின்றி, ஒற்றுமையின்றி, சமயத்திலில்லாத சாவகாச தோஷத்தால் ஜாதி வேற்றுமைகளின் கொடிய வறுமைப்பிணியால் பீடிக்கப்பட்டவர்களாய் காணப்படுகிறார் கள். வீரசைவமக்கள் முன்னேற்றத்திற்கும், சீர் திருத்தத்திற்கும் உழைக்க பண்டைய நாளில் ஏற்படுத்தப்பட்ட மடங்களும் மடாதிபதி களும் எங்கே? ஒரு காலத்தில் இப்பணியைச் சிறப்பாக மேற்கொண்ட கும்பகோண வீரசைவமடம், சீர்குலைந்து அம்மடங்களும், அவைக ளின் ஆலயங்களும், மானியங்களும் பலருடைய ஆதிக்கத்தில் அகப் பட்டிருந்து, சமீபத்தில் மீட்கப்பட்டிருப்பினும், இத்தகைய பணி யில் ஈடுபட போதிய சக்தி பெற்றதாயில்லை அதைச்சார்ந்த மற்ற சிறு மடங்களும், மடாதிபதிகளும் அந்நிலைமையில்தான் காணப்படுகிறார் கள். வறுமையில் பீடிக்கப்பட்ட இச்சிறு மடாதிபதிகள் தங்கள்கடமை களையும் ஆசாரங்களையும் துறந்து கிரகஸ்தர்களாகமாறி தங்கள் குடும் பங்களை போஷிப்பதையே சிவத்தொண்டாக நினைத்து, அல்லும்பக லும் அதிலேயே ஈடுபட்டுவருகிறார்கள். இம்மடாதிபதிகளை இனி நம்பு வதில் பிரயோசனமில்லை. தன்கையே தனக்குதவி அக்காரியங்களை இனி இத்தகைய மகா நாடுகள்தான் மேற்கொள்ளவேண்டும்.

கிராம சபைகள்.

கிராம சபைகளை ஏற்படுத்தவேண்டுமென்ற பிரயாசையோ, சீர்திருத்தவேண்டுமென்ற பிரயாசையோ வீரசைவ சமூகத்திலில்லை. தொன்றுதொட்டு நம் அனுபவத்திலிருந்துவரும் கிராம சபைகளை உற்சாகமூட்டி, சமூகசேவைசெய்ய ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும். கிராமசபையில் ஒவ்வொருவரும் ஊக்கம்காட்டி ஒற்றுமையுடன் பாடுபடவேண்டும். வேற்றுமை உணர்ச்சியை ஒழிக்கவேண்டும். வீரசைவன், லிங்கதாரணைபெற்றவர்கள் என்றால் எந்தஊராயினும், எப்பாஷை பேசுபவராயினும், நம்சகோதரரே என்னும் உணர்ச்சியைவளர்க்கவேண்டும். இம்மகாநாடுகளில்செய்யும் தீர்மானங்களை நிறைவேற்றிவைப்பது கிராம சபைகளின் பொறுப்பேயாகும். ஒவ்வொரு கிராமசபையின் ஆதரவிலும், ஒரு இராப்பள்ளிக்கூடம் ஏற்படுத்தி பகலில் பல தொழிலில் ஈடுபட்ட பெரியோர்களும், வாலிபர்களும் இராப்பாடசாலைகளில் படித்து மேன்மையடையவேண்டும். கிராம சபைகளில் கக்ஷி துவேசத்தை தலைகாட்ட இடங்கொடுக்கலாகாது. கிராம பெரியதனக்காரர்கள் இதில் தியாகம் காட்டவேண்டும். தாங்கள் பெரியவர்கள், தங்களை எல்லோரும் கேட்கவேண்டும், பணியவேண்டும் என்று இருக்கலாகாது. கவுரவமும், பெருமையும் பிறர்க்குச் சேவைசெய்வதில்தான் கிடைக்கும். சமூகத்தொண்டை சிவத்தொண்டாக ஒவ்வொருவரும் செய்யவேண்டும். சமூகத்திலுள்ள பெரியவர்கள், தனவந்தர்கள் தாராளமாய் இக்காரியங்களுக்குப் பொருள் உதவவேண்டும். வாலிபர்கள் சேவைசெய்யவேண்டும். ஒவ்வொருவரும் சமூக சேவையில் உண்மையாக ஈடுபட்டால் விரைவில் இச்சமூகம் முன்னணிக்கு வருமென்பதில் சந்தேகமில்லை.

சகோதரர்களே! சகோதரிகளே!! நெடுநேரம் உங்களுடைய அரிய காலத்தை கவர்ந்துகொண்டதற்காக என்னை மன்னித்து நான் கூறியவற்றில குணக்கைகளோ என்பணிவுள்ள விண்ணப்பங்களாக ஏற்றுக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஓராண்டும் நிறையப்பெறாத பாலபருவத்திலிருக்கும் இம்மகாநாடு, வீரசைவமக்கள் ஆதரவு மேன்மேலும் பெற்று வளர்பிறைச் சந்திரனைப்போல் விரைவில் நல்ல வாலிபம்பெற்று நமக்கு பல துறைகளிலும் பாடுபட போதிய ஆற்றலும் செல்வாக்கும் கொடுக்க நம் பஞ்ச ஆசாரியர்கள் ஆசிர்வதிப்பார்களாக.

சங்க ஆரம்ப வரலாறு.

நம் சமூகத்தினரிடையே சங்கம் ஒன்றை நிறுவவேண்டுமென நெடுநாட்களாக ஒரு பேரவா இருந்து வந்தது. அதற்கு இணங்க 1945ஹு மார்ச்சுமீ 22உ பலர் கூடி திரு. மாயரம் பாக்கம். வெங்கடாசல தேவரை கூடி சங்கம் நிறுவுவதற்கு ஆரம்ப கர்த்தாக நியமித்தார்கள். கடிதங்கள் மூலமாக தெரிவிக்கப்பட்டு நம் கிராமவாசிகள் 1-4-45-ல் சென்னை ஐயாமுதலி தெரு, 22 எண்ணுள்ள இல்லத்தில் கூடி கீழ்க்கண்டவாறு சங்க செயலாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

செயலாளர் தலைவர்:—1. பொன்னேரி அ-வெங்கடேச தேவர்

செயலாளர்கள்:—2, மாயரம்பாக்கம் வெங்கடாசல தேவர்

3. பூவிருந்தவல்லி கு. வேலாயுத தேவர்
4. கொரட்டூர் வீரபத்திர தேவர்
5. குண்ணத்தூர் இராமலிங்க தேவர்
6. புதுப்பாளையம் மாணிக்க தேவர்

சென்னையிலும் கிராமங்களிலும் கூடி செயலாளர்களும் பல பிரமுகர்களும் பிரசங்கங்கள்செய்து, கிளைச்சங்கங்கள் நிறுவி, நன்கொடை வசூலித்தனர். அவ்வப்போது கூட்டங்கள்கூடி சங்க நிகழ்ச்சிக்கான முறைகள் ஆலோசிக்கப்பட்டன. 20-9-45-ல் பொன்னேரி அ. வெங்கடேசதேவர் அவர்கள் தலைமையில் கூடியகூட்டத்தில் சட்ட திட்டங்கள் தயாரிக்க கீழ்க்கண்டவாறு ஒரு உபகமிட்டி நியமிக்கப்பட்டது.

1. பூவிருந்தவல்லி கு. வேலாயுத தேவர்
2. புதுப்பாளையம் மாணிக்க தேவர்
3. நா. நமசிவாய தேவர்
4. கொரட்டூர் வீரபத்திர தேவர்

16-10-45-ல் மகாநாடு கூட்டுவதாக தீர்மானிக்கப்பட்டு பிரசாரங்கள் மூலமாகவும், அறிக்கைமூலமாகவும் கிராமங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

சங்க நோக்கங்கள்.

சென்னை மாகாண வீரசைவசித்த ஜங்கம சமூகத்தாரின் தற்போதைய நிலைமை மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. பிற சமூகங்களைப்போல் நாமும் ஐக்கிய முன்னணியில் நின்று, அரசியல், கல்வி, சமுதாயம், பொருளாதாரம் முதலிய துறைகளில் விருத்தியடைய அரும்பாடு படவேண்டும்.

நம் சமூகச் சிறுவர், சிறுமிகள் அனைவருக்கும் கல்வி பயிற்றுவித்தல் மிகவும் இன்றியமையாத கடமையாகும். உலகில் நடைபெறும் அன்றாட விஷயங்களையும், பல்வேறு சமூக சீர்திருத்தங்களையும், சமாசார பத்திரிகைகள் மூலமாக அறிந்து ஐக்கிய முன்னணியில் நின்று இனத்தாரோடும், உலகத்தாரோடும் ஒத்து வாழ்தல் வேண்டும்.

நம் இனத்தாரிடையே மலிந்து கிடக்கும் தீயபழக்கங்கள், அர்த்தமற்ற சடங்குகள் முதலியன ஒழிதற்கு ஓயாது உழைத்தல்வேண்டும்.

சமூகக் கூட்டங்கள் ஆங்காங்கு கூடி சமூக நோக்கங்களை நிறைவேற்றுதல் வேண்டும்.

கிராமங்களில் முதியோர் கல்வி பெறுவதற்காக இராப்பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி நடத்துதல் வேண்டும்.

சென்னையில் தொண்டர் சங்கம் ஒன்றுகூட்டி தக்க போதகர்களைக்கொண்டு, வீரசைவபோதனை கொடுத்து அவர்கள் வாயிலாக கிராமங்களில் அவ்வப்போது கூடி போதனை செய்வித்தல் வேண்டும்.

நம் சமூகத்தாரிடையே இருக்த தற்சமயம் பிறரால் பரிபாலிக்கப் பட்டுவரும் காஞ்சி மடாலயம் முதலிய தரும பரிபாலன சொத்துக்களை மீண்டும் நம் ஆதீனத்திற்கு கொண்டுவர முயற்சிசெய்யவேண்டும்.

சங்க விதிகள்.

1. இச்சங்கம் 'சென்னை மாகாண வீரசைவ சித்த ஜங்கமர் சங்கம் எனப் பெயர் பெறும்.

2. இக்குலத்தைச்சார்ந்த 15-வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலரும் சங்க உறுப்பினர் ஆதல் வேண்டும்.

3. உறுப்பினர் ஒவ்வொருவரும் வருடசந்தா ரூ 1 ஆக செலுத்த வேண்டும். அதை ஒரேமுறையில் செலுத்துவது நலம் முடியாதவர்கள் இரண்டு தவணைகளில் செலுத்தலாம்.

4. சங்கக் கட்டளையை மீறும் அங்கத்தினர் இருந்தால், அவர் வீட்டில் நடைபெறும் சுபம் அசுபங்களிலும், நம் சமூகத்தினர் வீடுகளில் நடைபெறும் சுபம் அசுபங்களிலும் சத்தியாக்கிரக முறையில் அவரை பகிஷ்கரித்து சங்கக்கட்டளைக்கு அவர் இணங்கும்படி செய்ய வேண்டும்.

5. 7 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலரும் லிங்கதாரணம் செய்துகொள்ளவேண்டும்.

6. லிங்கதாரணம் செய்துகொள்ளும்போது லிங்கதாரண கட்டணம் ரூ. 1. செலுத்தி சங்கத்தின் ஆசீர்வாதமாக லிங்கத்தை இனாமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

7. விவாகத்தின்போது விவாகக்கட்டணயாக மணமகன் வீட்டார் ரூ. 1-ம் மணமகள் வீட்டார் 8 அணாவும் செலுத்தவேண்டும்.

8. நன்கொடை, பொருளுதவி முதலியன நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

9. கிராமங்களில் சிக்கல்கள் ஏற்படின் அவ்வக்கிராம சங்கங்கள் அவைகளைத் தீர்ப்புசெய்து அத்தீர்மானங்களை மத்திய நிர்வாக சபைக்கு அனுப்புதல் வேண்டும்.

10. குற்றங்களுக்குத் தண்டனையாக அபராதம் விதித்தல் சட்டப்படி உசிதமல்ல. குற்றவாளிகளிடமிருந்து மன்னிப்புக்கடிதம் எழுதி வாங்கி கிளைச் சங்கத்தில் ஒன்று வைத்துக்கொண்டு, ஒன்றை மத்திய சபைக்கு அனுப்புதல் வேண்டும்..

11. உபசங்கங்களின் தீர்ப்புகள் சரியல்லவென்று தெரிந்தால் மத்திய சபைக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

12. ஒருவர்மீது குற்றம் ஏற்படின், அவர் எந்தக் கிளைச்சங்கத்தைச் சேர்ந்தவரோ அந்தக் கிளைச்சங்கத்திற்குத்தான் புகார்செய்ய வேண்டுமே யல்லாது தனிநபரைத் தாக்குதல்கூடாது. அக்கிளைச்சங்கம் இதைப் பரிசிலனைசெய்து அதன் தீர்ப்பை மத்திய சபைக்கும், புகார் செய்தவருக்கும் தெரியப்படுத்தவேண்டும்.

13. சங்க மகாசபை அவ்வப்போது செய்யும் தீர்மானங்களுக்கு உட்பட்டு நிர்வாக அலுவல்களை சங்க மத்திய நிர்வாகசபை நடத்தி வரவேண்டும்.

14 சங்கத்தலைவர், உபதலைவர், பொதுக்காரியதரிசி, உதவி பொதுக்காரியதரிசி, பொக்கிஷதாரர், நிர்வாகஸ்தர்கள் நான்குபேர், கிளைச்சங்கங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் இரண்டு அங்கத்தினராக (உபத்தலைவர், காரியதரிசி) ஆக மொத்தம் 19 பேர் மத்திய நிர்வாக சபை அங்கத்தினர் ஆவர்.

15. தலைவர், காரியதரிசி, அங்கத்தினர் மூன்றுபேர்கொண்ட ஆலோசனை சபை ஒன்று அமைக்கவேண்டும். இச்சபை சங்க முன்னேற்றத்திற்கான ஆலோசனைகளை நிர்வாக சபைக்கு எடுத்துச் சொல்லும்.

16. சங்க நிர்வாக ஆண்டு, ஆண்டுதோறும் மார்ச்சுமாதம் முடிவோடு (பங்குனி) முடிவடையும், ஒவ்வோராண்டும் ஏப்ரல்மாதம் (சித்திரை) மகாநாடு நடத்தி நிர்வாகசபை அங்கத்தினர்களை முறைப்படி தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

17. மத்திய நிர்வாக சபையிலோ அல்லது கிளைச்சபைகளிலோ ஒருவர் விலகினால் அந்தந்த சங்க நிர்வாகிகளே மற்றொருவரை அங்கத்தினராக நியமித்துக்கொள்ளவேண்டும்.

18. மகாசபையில் பொதுவாக நிர்ணயிக்கப்படும் செலவுகளை சங்கத்தலைவரைக் கலந்துகொண்டு காரியதரிசி கிரமப்படி செய்யவேண்டும். நியாயமான அவசரச் செலவுகளைத் தலைவரின்முன் அனுமதி பெற்று காரியதரிசி செய்தபின், அடுத்துவரும் நிர்வாகக்கூட்டத்தில் ஷை செலவு விவரங்களை அறிவித்தல் வேண்டும். சங்கத்தின் சார்பாக செய்யப்படும் செலவுக்குத்தக்க ஆதாரவுச்சீட்டுகள் அவ்வப்போது தாக்கல் ஆகவேண்டும்.

19. அங்கத்தினர்கள் அந்தந்த கிளைச்சங்க காரியதரிசியினிடம் சந்தா, நன்கொடை முதலியவைகளைக் கொடுத்து ரசீதுபெறவேண்டும். காரியதரிசிகள் ஷை தொகையை பொக்கிஷதாரரிடம்கொடுத்து ரசீது புத்தகத்தில் பொக்கிஷதாரரின் கைபெழுத்து வாங்கவேண்டும். கிளைச்சங்க அவசர செலவு நிமித்தமாக தங்கள்வசம் ரூ 5 மாத்திரம் வைத்து கொள்ளலாம்.

20. கிளைச்சங்கங்களிலிருந்து சந்தா, விவாகச்சட்டணம், லிங்கதாரணக்கட்டணம், நன்கொடை,முதலியவைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளின் பொதுநலத்துக்குரியசெலவை மத்தியசபைதீர்மானிக்கும்

21. இச்சங்கம் இதர சங்கங்களோடு தொடர்பு வைத்துக்கொண்டு சங்க அபிவிருத்திக்கான வழிகளை தேடவேண்டும்.

22. சங்கத்தின்பெயரில் சங்கநிதியை அவ்வூரில் உள்ள சிறந்தரான நிதியில் பொக்கிஷதாரர் சேமிதம் செய்யவேண்டும். பொக்கிஷதாரர் அவசர செலவு நிமித்தமாக ரூ 20 மாத்திரம் தன்கையில் வைத்

துக்கொள்ளலாம். தலைவரின் அனுமதிபேரில் காரியதரிசிக்குத் தேவை யானபோது பணம்கொடுத்து ரசீது பெறவேண்டும்.

23. பாஸ்புத்தகம் தொடரப்பெறாத செக்குகளை நிராகரித்து விடும்படி பாங்கிக்கு எழுத்துமூலம் முன்னறிக்கை செய்தபின். பாஸ் புத்தகம் காரியதரிசி வசமும் செக்கு புத்தகம் பொக்கிஷதாரர் வசமும் இருத்தல்வேண்டும். இவ்விரண்டையும் தருவித்து நிர்வாகசபையின் வேறு அங்கத்தினர்கள் பரிசீலனை செய்யலாம்.

24. கிளைச்சங்கங்கள் மாதம் ஒருமுறை அவசியம் கூடவேண் டும். மத்திய நிர்வாகசபை மூன்று மாதத்திற்கொருமுறை அவசியம் கூடவேண்டும் மத்தியநிர்வாகசபைக்கு கிராமங்களிலிருந்துவரும் இரு அங்கத்தினர்களுக்கு சங்கநிதியிலிருந்து பிரயாணகட்டணம் மாத்தி ரம் கொடுக்கப்படும்.

25. சங்க அங்கத்தினர்களில் குறைந்தது 1/10 பாகத்தார் கையொப்பம்செய்த வேண்டுகோளின்படி மத்தியசபையையோ அல் லது கிளைச்சபையையோ கூட்டவேண்டும்.

26 நிர்வாக சபை கூட்டத்திற்கு 10 பேர் ஆஜரானால் கோரம் ஏற்பட்டதாகும். மகாசபை கூட்டத்திற்கு 1/6 பாகம் ஆஜரானல் கோரம் ஏற்பட்டதாகும்.

27 காரிய கூட்டத்திற்கு தலைமை வகிக்கவேண்டியவர் சங்கத் தலைவர். அவர் இல்லையானால் உபதலைவர் இருவரும் இல்லையானால் அவ்வமயம் அங்கத்தினரிடையே தேர்ந்தெடுக்கப்படும் நபர் மகாசபை யின் காரியக்கூட்டங்களுக்கு அன்னியர் தலைமை வகித்தல் கூடாது.

28 கூட்டத்தில் ஆஜரான அங்கத்தினர்களில் பெரும்பாலான வர்களுடைய ஓட்டுகளால் நிறைவேறிய தீர்மானங்களே செல்லத்தக் கவை. ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஒரு ஓட்டு அளிக்கவே உரிமை யுண்டு. முந்தின கூட்டத்தீர்மானத்தை ரத்துசெய்ய பிந்தின கூட்டத் திற்கு அதிகாரம் உண்டு. அபிப்பிராயபேதம் சமமாய் இருந்தால் அவைத் தலைவர் தமது தீர்ப்பு ஓட்டு அளித்து தீர்மானத்தைப் பைசல் செய்யலாம்.

29 மகாசபை கூட்டுவதற்குக் குறைந்தது 15 நாள் முன்னதா கவும், மத்திய நிர்வாகசபை கூட்டுவதற்கு 7 நாள் முன்னதாகவும் கிளைச்சங்கக் கூட்டமோ அல்லது கிளைச்சபை நிர்வாகக் கூட்டமோ கூட்ட 3 நாள் முன்னதாகவும் அறிவிக்கவேண்டும்.

30 கூட்டத்தில் பேசப்படும் விஷயம் பிறப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும்.

31 நிர்வாக ஆலோசனை சபைகளின் அங்கத்தினர்கள் எவர்பேரிலாவது அதற்கெனக்கூடிய மகாசபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக்கொணர்ந்து, தீர்மானம்மூலம் நிறைவேற்றி குறிப்பிட்ட நபரை பதவியினின்றும் விலக்கலாம். ஆனுல் சங்க அங்கத்தினர் எண்ணிக்கையில் 1/4 பாகம் ஆஜராகி, அந்த ஆஜர் எண்ணிக்கையில் 1/3 பாகத்தினர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றினுல் அது செல்லத்தக்கது. 28-வது சட்டம் இதற்குச் செல்லத்தக்கது அல்ல.

23 கிளைச்சங்க நிர்வாகிகளுக்கு அங்கத்தினர் பாதிபேருக்குக் குறையாமல் ஆஜராகி அதில் 1/3 பாகம் ஓட்டுகளால் ஆதரிக்கப்பட்டால் அது செல்லத்தக்கது.

33 பிரதி கூட்டத்திலும் அவரவர்பேசும் முறைவரும்வரை அங்கத்தினரும் அல்லாதாரும் அமரிக்கையுடன் அமர்ந்தும், கூட்ட நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்தும், சட்டவிதிகளுக்குக் கட்டுப்பட்டும் அவைத்தலைவரின் ஆணைக்கு உட்பட்டும் இருத்தல் வேண்டும்.

34 சங்க அங்கத்தினர்கள் ஒவ்வொரு மகாசபை கூட்டத்திற்கும் கூடுமானவரை தவருது ஆஜராகி தததம் சந்தாத்தொகையைத் தவருது செலுத்தவேண்டும். எந்த அங்கத்தினர் எபபொழுது சேர்ந்தாலும் வருடசந்தா பூராவும் செலுத்தவேண்டும்.

35 சங்கத்தை அகௌரவப்படுத்தும் அங்கத்தினரை நீக்கிவிடவும், விரும்பத்தகாத நபரை சேர்க்காதிருக்கவும், நிர்வாக சபைக்கு அதிகாரம் உண்டு. மற்ற விஷயத்தையும் போல் இவ்விஷயத்திலும் மகாசபையின் தீர்ப்பே முடிவானது.

36 சங்கநிலையம், புத்தக நிலையம், வாசகசாலை. இராப்பாடசாலை முதலியவை சம்பந்தமான விதிகளை நிர்வாகசபை நிர்ணயிக்கும்.

37 கூட்டங்களைக் கூட்டுவதும், வரவு செலவு கணக்குகளைச் சரிவர வைப்பதும், கடந்த கூட்ட நிகழ்ச்சிகளின் அறிக்கையை நிகழ் கூட்ட ஆரம்பத்தில் சமர்ப்பிபபதும், அறிஞர்களையும், பிரமுகர்களையும் தருவித்து சொற்பொழிவுகளை நிகழ்த்தச்செய்வதும், சங்க அலுவல்களை சட்டதிட்ட விதிப்படி நடத்துவதும் ஆகிய பொறுப்பு பொதுவாக மத்திய நிர்வாகசபையினுடையதும், சிறப்பாக பொதுக் காரியதரிசியினுடையது மாகும்.

38 நிர்வாக வருஷ இறுதி வரவு, செலவு, இருப்பு கணக்கு அறிக்கை நிர்வாகசபையார் தயார்செய்து, மகா சபையில் நியமிக்கப் படுபவரால் தணிக்கை செய்யப்பட்டு பிரதி வருஷமும் ஏப்ரல் மாதக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்படவேண்டும்.

39 சங்கத்தில் ஏற்படும் லாப நஷ்டங்களை அடுத்துவரும் நிர்வாகிகள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

40 இச்சங்கம் கீழ்க்குறிப்பவைகளைச் சரிவர வைத்துக் காப் பாற்றவேண்டும்.

1 சங்க தீர்மான புத்தகம் (Minutes book)

2 வரவு ஜாபிதா (சந்தா, நன்கொடை, லிங்கதாரண கட்டளை, விவாகக்கட்டளை)

3 தினசரி வரவு செலவு இருப்புப் புத்தகம்

4 விஜயம் செய்பவர் மதிப்புரைப் புத்தகம்

5 அங்கத்தினர் ஜாபிதா

6 அங்கத்தினர் ஆவதற்குத் தகுதியுடையவர் மனுக்கள்

7 சுற்றறிக்கைப் புத்தகம்

8 சந்தா, நன்கொடை ரசீது புத்தகம்

9 பாங்கி, பாஸ், செக்கு புத்தகங்கள்

10 ஆதாவுச் சீட்டுகள்

11 ஆபீஸ் பைல்கள் (Office files)

12 சங்க முத்திரை

13 சங்க நோக்க சட்ட திட்ட தீர்மானங்கள் புத்தகம்

14 ஆஸ்தி விபர ஜாபிதா

15 ஜன சங்கியை புத்தகம்

41 சங்க சட்ட திட்டங்களில் கூடுதல் குறைதல் செய்ய் அவசியம் ஏற்படின் அதற்செனக் கூடிய விசேஷ மகாசபையில் ஆஜரான மொத்த அங்கத்தினர்களில் பாதிக்கு மேற்பட்டவர்களின் ஆதரவு பெற்று தேவையான மாறுதல்களை ஏற்படுத்தலாம்.

42 கிராமங்களில் குத்தகை முதலியவைகளின் மூலமாகக் கிடைக்கும் வருமானத்தை அந்தந்த கிராமப் பொது நலத்திற்கே உப யோகப்படுத்திக்கொள்ள வேண்டும். மத்திய நிர்வாகசபைக்கு இது விஷயங்களைத் தெரியப்படுத்த வேண்டியதில்லை.

43 சமூகவிஷயமல்லாத மற்றவிஷயங்களில் சங்கம் தலையிடாது

தீர்மானங்கள்.

1 நம் குலத்தில் உதித்த ஒவ்வொரு ஆண் பெண்ணுக்கும் 7-வது வயதில் லிங்கதாரணம் செய்யவேண்டும்.

2 நம் குலத்தில் உதித்த ஒவ்வொரு ஆண் பெண் குழந்தையையும் கட்டாயம் படிக்கவைக்கவேண்டும்.

3 நம் மகாநாட்டின் காரியக் கமிட்டியாரால் தயாரிக்கப்பட்ட சங்க விதிகள் புத்தக ரூபத்தில் பிரசுரிக்கப்பட்டு, கிராமங்களில் வழங்கப்பட வேண்டும்.

4 நம் வீரசைவ ஜங்கம குலத்திற்குப் பொதுவாகப் பாதிக்கப்பட்ட காஞ்சி மடாலயத்தை அன்னியர் ஆக்ரமிப்பினின்று நமதாக்க வேண்டும்

5 வீரசைவ ஆகமத்தில் வீரசைவ மக்களுக்கென வரையறுக்கப்பட்ட சிலங்கள் 64-ல் ஒன்றாகிய சுத்த சுதேசியத்தை, அதாவது கதரணிவதைப்போன்ற சுதேசியத்தை ஒவ்வொரு வீரசைவமகனும் மேற்கொள்ளவேண்டும்.

சங்க மத்திய நிர்வாக சபை.

தலைவர்

மா. வெங்கடாசலதேவர்

உபத்தலைவர்

கலவை. முனுசாமி தேவர்

பொதுக் காரியதரிசி

வீ. ஆதிகேசவலு தேவர்

உதவி பொதுக்காரியதரிசி

நா. நமசிவாய தேவர்

பொக்கிஷதாரர்

தி. தேவராஜுலு தேவர்

நிர்வாகஸ்தர்கள்

(1) கொ. வீரபத்திரதேவர்

(2) கிளுர் கு. சங்கரையதேவர்

(3) R. முத்துகிருஷ்ண தேவர்

(4) வி. ராஜிவேலு தேவர்

சென்னை கிளைச்சங்கத்திலிருந்து

உபதலைவர்—கு. இராமலிங்க தேவர்

காரியதரிசி—த. கி. வீரையதேவர்

கஸ்வாபுரம் கிளைச்சங்கத்திலிருந்து

உபதலைவர்—க, சின்னைய தேவர்

காரியதரிசி—க. மாணிக்க தேவர்

தத்த கல்லூர் கிளைச்சங்கத்திலிருந்து

உபதலைவர்—கு. சின்னப்ப தேவர்

காரியதரிசி—தி. பங்காரு தேவர்

நந்தியம்பேடு கிளைச்சங்கத்திலிருந்து

உபதலைவர்—சி. தி. முனுசாமி தேவர்

காரியதரிசி—ந. க. கன்னைய தேவர்

ஆண்டார்குப்பம் கிளைச்சங்கத்திலிருந்து

உபதலைவர்—தோ. மாணிக்கதேவர்

காரியதரிசி—கா. சண்முக தேவர்

உப சங்கங்கள்.

சென்னை கிளைச்சங்கம்.

உபதலைவர்—கு. இராமலிங்க தேவர்

காரியதரிசி—த. கி. வீரைய்ய தேவர்

அங்கத்தினர்கள்—த. சி. கோவிந்தராஜுலு தேவர்

சு. தருமலிங்க தேவர்
சு. கோபால் தேவர்
அ. சிவப்பிரகாச தேவர்
அ. க. ஆறுமுக தேவர்
த. வெ. துரைசாமி தேவர்
பூ. வேலாயுத தேவர்
தா. சி. வீரராகவலு தேவர்
சை. மாணிக்க தேவர்

கஸ்வாபுரம் கிளைச்சங்கம்.

உபதலைவர்—க. சின்னையதேவர்
காரியதரிசி—ந. மாணிக்க தேவர்
அங்கத்தினர்கள்—போ. முத்தியாலு தேவர்
கா. பச்சைமல தேவர்
க. நடேச தேவர்
கோ. சி. கோவிந்த தேவர்
போ. செங்கல்வராய தேவர்

தத்தநல்லூர் கிளைச்சங்கம்

உபதலைவர்—கு. சின்னப்பதேவர்
காரியதரிசி—இ. பங்காரு தேவர்
அங்கத்தினர்கள்—நாட்டு கன்னி தேவர்
கு. சுப்புராம தேவர்
பத்திரி தேவர்
தங்கவேலு தேவர்
துரைசாமி தேவர்

நந்தியம்பேடு கிளைச்சங்கம்

உபதலைவர்—சி. இ. முனுசாமி தேவர்
காரியதரிசி—ந. க. கன்னையப்ப தேவர்
அங்கத்தினர்கள்—க. சிவலிங்க தேவர்
தெ. துரைசாமி தேவர்
ந. சி. சொக்கலிங்க தேவர்
நாட்டு. சுப்பராய தேவர்
எ. கிருஷ்ணசாமி தேவர்
திருப்பந்தியூர். சங்கரைய தேவர்
பேரம்பாக்கம் சுப்பராய தேவர்
ஏனாதூர். சிவலிங்க தேவர்
உக்கல். ஏகாம்பர தேவர்

ஆண்டார் குப்பம் கிளைச்சங்கம்.

உபதலைவர்—தோ. மாணிக்க தேவர்
காரியதரிசி—நா. சண்முக தேவர்
அங்கத்தினர்கள்—வெ. கன்னையப்ப தேவர்
நா. சன்னையப்ப தேவர்
க. செஞ்சு தேவர்
கு. மாணிக்க தேவர்
பொன்னேரி. V. முனுசாமி தேவர்

நன்கொடையளித்தவர்கள் ஜாபிதா.

	ரூ	அ		ரூ	அ
மா-வெங்கடாசல தேவர்	25	0	கல்வாபுரம் கண்ணுதேவர்	3	0
சாலவாக்கம் வேதகிரி தேவர்	25	0	ப-தங்கவேலு தேவர்	3	0
குப்பம் அருணகிரி தேவர்	20	0	சி-சொக்கலிங்க தேவர்	3	0
அ-வெங்கடேச தேவர்	20	0	க-வெங்கடசாமி தேவர்	3	0
க-முத்துகிருஷ்ண தேவர்	15	0	ரத்தின தேவர்	3	0
தி-தேவராஜுலு தேவர்	15	0	க-உமாபதி தேவர்	3	0
நந்தியம்பேடுபொதுநன்கொடை	15	0	R-பத்திரி தேவர்	3	0
பேரம்பாக்கம் கிராமம் வரவு	15	0	ஏ-குப்பைய தேவர்	3	0
தத்தனூர்கிராமம் பொது நன்கொடை	15	0	வி-நடராஜ தேவர்	3	0
			க-சி-கோவிந்த தேவர்	3	0
கல்வாபுரம் கிராமம் பொது நன்கொடை	15	0	போடி-வீரபத்திர தேவர்	2	0
			த-வீரராகவ தேவர்	2	0
வீராவரம் ஆதிகேசவலுதேவர்	10	0	க-நா-பச்சையப்ப தேவர்	2	0
க-மாணிக்கதேவர்	10	0	P-V-முத்தியாலு தேவர்	2	0
கா-முருகைய தேவர்	10	0	பே-வீரபத்திர தேவர்	2	0
தத்தனூர் சி-கோவிந்த தேவர்	10	0	சுப்பராய தேவர்	2	0
சி-தி-மாணிக்க தேவர்	10	0	P-V-துரைசாமி தேவர்	2	0
பூந்தமல்லி வேலாயுத தேவர்	10	0	நா-கன்னி தேவர்	2	0
V-லிங்கைய தேவர்	10	0	தெ-மகாலிங்க தேவர்	2	0
கிளூர்-சங்கரைய தேவர்	10	0	வி-வீரபத்திர தேவர்	2	0
கொ-வீரபத்திர தேவர்	10	0	கா-ஏகாம்பர தேவர்	2	0
கு-ராமலிங்க தேவர்	10	0	சி-ராமலிங்க தேவர்	2	0
ஏனுதூர் கிராமம்	8	0	த-முனுசாமி தேவர்	2	0
பண்ணூர் சங்கரைய தேவர்	6	0	சி-செங்கல்வராய தேவர்	2	0
த-வெ-துரைசாமி தேவர்	5	0	விட்டல் தேவர்	2	0
த-கி-வீரையதேவர்	5	0	த-க-கிருஷ்ணைய தேவர்	2	0
த-கு-சின்னப்ப தேவர்	5	0	பொ-பக்கிரி தேவர்	2	0
தி-பங்காரு தேவர்	5	0	கல்-பொன்னுசாமி தேவர்	2	0
திருவஞ்சேரி-மாணிக்க தேவர்	5	0	வீரா-வரதராஜுலு தேவர்	2	0
கா-நமசிவாய தேவர்	5	0	அ-அல்லமைய தேவர்	2	0
M-R-கிருஷ்ணசாமி தேவர்	5	0	குப்பம் வேலாயுத தேவர்	2	0
பண்ணூர் வீராசாமி தேவர்	5	0	K-V-கன்னி தேவர்	2	0
க-ஆறுமுக தேவர்	5	0	கல்-ந-அப்பாவு தேவர்	2	0
ஆண்டார்குப்பம் கிராமம் பொது நன்கொடை	5	0	வீராவரம் சுப்பிரமணியதேவர்	1	0
			மா-கன்னியம்மாள்	1	0
ஆண்டார்குப்பம் கிராம நன்கொடை வீரபத்திரதேவர்	5	0	ஏ-மாணிக்க தேவர்	1	0
			வி-கன்னைய தேவர்	1	0
எழுச்சூர் மாணிக்க தேவர்	5	0	ந-மாணிக்க தேவர்	1	0
க-சாம்பசிவ தேவர்	5	0	தே-க-வேணு தேவர்	1	0
அ-சுந்தரம் தேவர்	5	0	சென்னை R-பட்டுதேவர்	1	0
மா-சிவசங்கர தேவர்	5	0	தி-நாகைய தேவர்	1	0
தருமலிங்க தேவர்	5	0	கல்வாபுரம் ராஜிவேலு தேவர்	1	0
உக்கல் சுப்பராய தேவர்	5	0	செ-சதாசிவ தேவர்	1	0
அ-ஐயாசாமி தேவர்	5	0	தெ-சாம்பசிவ தேவர்	1	0
கு-சுப்பராய தேவர்	4	0	ராமச்சந்திர தேவர்	1	0
தஞ்சி தேவர்	4	0	கலுவ-முனுசாமி தேவர்	1	0
வி-காளைய்ய தேவர்	4	0	உக்கல்-முனுசாமி தேவர்	1	0

	ரூ	அ		ரூ	அ
[illegible] தேவர்	1	0	[illegible] தேவர்	0	8
க-சி-வேதாசல தேவர்	1	0	செங்கல்வராய தேவர்	0	6
பாலைய தேவர்	1	0	முனுசாமி தேவர்	0	4
க-கந்தசாமி தேவர்	1	0	கன்னைய தேவர்	0	4
ஞ-கன்னைய தேவர்	1	0	கா-கன்னைய தேவர்	0	4
பொ-அங்கு தேவர்	1	0	செஞ்சு தேவர்	0	4
கு-நடேச தேவர்	0	8	P-ராமலிங்க தேவர்	0	4
ஆ-மாணிக்க தேவர்	0	8	செங்கைய தேவர்	0	4
வீ_வேதகிரி தேவர்	0	8	ராஜகோபால் தேவர்	0	4
கொ-ராஜு தேவர்	0	8	முத்தியாலு தேவர்	0	4
எ-கன்னைய தேவர்	0	8	சல்லமாரி தேவர்	0	4
V-அருணாசல தேவர்	0	8	கெவ,கோவிந்த தேவர்	0	4
பாலைய தேவர்	0	8	கெங்கைய தேவர்	0	4
அமுர்தலிங்க தேவர்	0	8	க,சின்ன செஞ்சு தேவர்	0	4
கா-ரத்தினசாமி தேவர்	0	8	முனுசாமி தேவர்	0	4
கு-முனியம்மாள்	0	8		501—2—0	

வரவு செலவு விபரம்.

1	நன்கொடை வரவு	501	2	0
2	லிங்கதாரணக் கட்டணம்	8	4	0
3	மகா நாட்டில் சாமான் ஏலம் போட்டதின் மூலம் வரவு	13	0	6
		522	6	6

செலவு விபரம்.

1	14-4-45-முதல் 30-9-45 வரை சங்க பிரசார செலவுகள்	39	11	0
2	பொதுச் செலவு நோட்டுப் புத்தகங்கள்	1	12	0
3	லிங்கங்கள் வாங்கியது	38	0	0
4	லெடர் தாள்கள் அச்சடிக்க	2	0	0
5	சங்கச் சின்னங்கள்	11	13	6
6	மகாநாடு விளம்பரம் பத்திரிகை அச்சடிக்க	9	8	0
7	,, தபால் செலவு	13	13	0
8	,, தலைவர் வரவேற்புப்பத்திரம் அச்சடிக்க	12	0	0
9	,, கலியாண மண்டப வாடகை	13	8	0
10	வரவேற்புக் கழகத்தலைவர்கள் திரு முத்துகிருஷ்ண தேவர் திரு தேவராஜுலுதேவர் அவர்கள் மூலம் செலவு	132	0	5
	17.10-45-ல் மீதி இருப்பு	248	4	7
		522	6	6

நன்றிகூறல் **கீளூர். சங்கரைய்ய தேவர்.**

இம்மகாநாடு இவ்வளவு சிறப்பாக நடைபெறுவதற்கு நமக்கு அவ்வப்போது ஊக்கம்கொடுத்துக்கொண்டு இதனுடைய நடைமுறைகளையும் அடிக்கடி அரிவித்துவந்த நம் தலைவர் திரு. வை-நடேச பண்டாரம் அவர்களுக்கும் இன்று கொடியேற்று விழாவை நடத்திவைத்த திரு R. A. கமலபதி பண்டாரம் அவர்களுக்கும் இன்று அவரோடு இங்குப்போந்து தம் அரிய மொழிகளால் நம்மை மகிழ்வித்த பெரியோர்களுக்கும் தாம் இம் மகாநாட்டிற்கு விஜயம்செய்ய இயலா திருப்பினும் நமக்கு ஆசிச்செய்திகள் அனுப்பிய பிரமுகர்களுக்கும் தத்தம் அலுவல்களையெல்லாம் விட்டு இம்மகாநாட்டிற்கு விஜயம்செய்து இம் மகாநாட்டை சிறப்பித்த நம் குலாபிமானிகளுக்கும் நம் அன்பார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். மற்றும்நம் குலத்தவர் முன்னேறவேண்டி இச்சங்கம்நிருவ ஆரம்பகர்த்தராக இருந்த மா-வெங்கடாசல தேவருக்கும் அன்னார் உடனிருந்து அரும்பாடுபட்டு இச்சங்கத்தை நிருவிய செயலாளர் கமிட்டியினருக்கும் நமது மனமார்ந்த வந்தனத்தை அரிவித்து இம்மகாநாட்டை இனிது நிறைவேற்றுவோம்.

சுபம்! சுபம்!!